بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 38

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிரரி கமரி 1445 -ரபீயுல் அவ்வல் ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - தபூக் 21 ★ 21 செப்டம்பர் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَلَقَدْ صَرَّفْنَا لِلنَّاسِ فِيْ هٰذَا الْقُرْاٰنِ مِنْ كُلِّ مَثَلٍ ۫ فَاَبٰٓى اَكْثَرُ النَّاسِ اِلَّا كُفُوْرًا ﴿۹۰﴾

**பொருள்**

நிச்சயமாக நாம் மக்களுக்காக இந்தக் குர்ஆனில் (முக்கியமான) ஒவ்வொரு செய்தியினையும் பல்வேறு கோணங்களில் விளக்கிவிட்டோம். இவ்வாறிருந்தும், பெரும்பாலானவர்கள் நன்றிகேடு காட்டியவாறு நிராகரித்து விட்டனர். (17:90)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எந்த மக்கள் மற்றவர்களுக்கு நன்மை பயக்கின்றனரோ மேலும் பயனளிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனரோ அவர்களின் ஆயுள் நீள்கின்றது.**
**எந்த நபர் உலகில் நன்மைக்கு காரணமாக இருக்கின்றனரோ அவரது ஆயுள் நீண்டதாக இருக்கின்றது. எவர் தீங்கிற்கு காரணமாக இருக்கின்றாரோ அவர் விரைவாக எடுத்துக் கொள்ள கொள்ளப்படுகின்றார் என்பது உண்மையாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

### நீண்ட ஆயுளைப் பெறுவதற்கான வழிமுறை

பிறருக்காக துஆ செய்வதிலுள்ள ஒரு மகத்துவ மிக்க பயன் இதுவும் ஆகும். அதாவது, ஆயுள் நீட்டிக்கப்படுகின்றது. அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த வாக்குறுதியை செய்துள்ளான். அதாவது, எந்த மக்கள் பிறருக்கு நன்மை பயக்கின்றனரோ மேலும், பயனளிக்கக் கூடியவராக இருக்கின்றனரோ அவர்களின் ஆயுள் நீண்டதாக இருக்கின்றது. உதாரணமாக,

وَاَمَّا مَا يَنْفَعُ النَّاسَ فَيَمْكُثُ فِي الْاَرْضِ

என்று அல்லாஹ் கூறுகின்றான். மற்ற வகையான அனுதாபங்கள் எல்லைக்குட்பட்டவையாக இருக்கின்றன. எனவே சிறப்புடன் எதனை தொடர் நன்மையாகக் குறிப்பிட முடியுமோ அது துஆவின் தொடர் நன்மையேயாகும். நன்மையின் பயன் அதிகமானதாக இருக்கின்றது. எனவே நாம் மிகவும் அதிகமாக துஆவின் மூலமாக இந்த வசனத்திலிருந்து பயனடைய முடியும். மேலும் எந்த நபர் உலகில் நன்மைக்கு காரணமாக இருக்கின்றனரோ அவரது ஆயுள் நீண்டதாக இருக்கின்றது. எவர் தீங்கிற்கு காரணமாக இருக்கின்றாரோ அவர் விரைவாக எடுத்துக் கொள்ளப்படுகின்றார் என்ற இந்த விஷயம் உண்மையான விஷயம் ஆகும். கூறுகின்றார்கள்: ஷேர் சிங் என்பவர் பறவைகளை உயிருடன் பிடித்து நெருப்பில் போட்டு வந்தார். அவர் இரண்டு ஆண்டுகளுக்குள்ளேயே கொல்லப்பட்டார். எனவே خَيْرُ النَّاسِ مَنْ يَّنْفَعُ النَّاسَ (மக்களுக்கு நன்மை பயப்பவர் மக்களில் சிறந்தவர்) என்ற நிலையை அடைவதற்கு மனிதன் சிந்தித்து

தொடர்ச்சி : 12-ம் பக்கம்

**ஒவ்வொரு இனத்தின் சமூகத்திலும் சக இனமே இரட்சிப்பு வழங்க முடியும். ஏனெனில், அவர்களில் இருப்பவர்களே முன்மாதிரியாகவே இருக்க முடியும்.**
**எனவே மனிதனைத் தவிர மற்ற இனத்தைச் சேர்ந்தவை மனிதர்களுக்கு தூதராக தோன்ற முடியாது.**
**ஏனெனில் அவை அவர்களுக்கு முன்மாதிரியாக ஆக முடியாது**

وَمَا مَنَعَ النَّاسَ اَنْ يُّؤْمِنُوْٓا اِذْ جَآءَهُمُ الْهُدٰٓى اِلَّآ اَنْ قَالُوْٓا اَبَعَثَ اللّٰهُ بَشَرًا رَّسُوْلًا ﴿۹۵﴾

قُلْ لَّوْ كَانَ فِي الْاَرْضِ مَلٰٓئِكَةٌ يَّمْشُوْنَ مُطْمَئِنِّيْنَ لَنَزَّلْنَا عَلَيْهِمْ مِّنَ السَّمَآءِ مَلَكًا رَّسُوْلًا ﴿۹۶﴾

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் வசனம் 95-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்: நானோ மனிதத் தூதர் ஆவேன்; இதை விட அதிகமாக எனக்கு வேறு எந்த வாதமும் கிடையாது என்று முந்தைய வசனத்தில் கூறப்பட்டிருந்தது.

நபிமார்கள் மீது பெரும் பெரும் ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றன ; அவற்றில் ஒன்று அவர்கள் மனிதத் தூதர் ஆவார்கள் என்பதாகும் என்று இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. இது ஒரு ஆட்சேபனை இல்லை. மாறாக, இந்த சொற்களில் பல வகையான ஆட்சேபனைகள் வந்து விடுகின்றன. அல்லாஹ்வோ மிகவும் மேன்மை மிக்கவன் ஆவான். அவ்வாறிருக்க அவன் எப்படி மனிதனையே தூதராக ஆக்கி அனுப்ப முடியும்? என்பது சில மக்களின் ஆட்சேபனையாக இருக்கின்றது. இந்த மக்கள் இறை வேதம் இறங்குவதையே நிராகரிக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். சில மக்கள் ஆணவம் மற்றும் அகந்தையின் காரணமாக மனிதத் தூதரை நிராகரிக்கின்றவர்களாக இருக்கின்றனர். அதாவது, இவர் எப்படி மனிதராக இருக்கின்றாரோ அதுபோன்றே நாங்களும் மனிதராக இருக்கின்றோம்; அவருக்கு மட்டும் ஏன் சிறப்பு வழங்கப்பட்டுள்ளது? எனவே நாங்கள் அவரை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று இவர்கள் கூறுகின்றனர். இந்த மக்கள் இறை வேதம்

தொடர்ச்சி : 12-ம் பக்கம்

## நபிமொழி

**ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமிற்கு சகோதரர் ஆவார். ஒருவர் மற்றவர் மீது அநீதியிழைக்கவும் கூடாது: அநீதியாளர்களிடம் ஒப்படைத்து விடவும் கூடாது.**

(2442) ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (ஒரு) முஸ்லிம் (மற்றொரு) முஸ்லிமிற்கு சகோதரர் ஆவார். தானும் அவர் மீது அநீயிழைக்கக் கூடாது; மேலும் அவரை (அநீயிழைப்பாளரின் வசம்) ஒப்படைத்து விடவும் கூடாது. எந்த நபர் தமது சகோதரரின் பணியில் மும்முரமாக இருப்பாரோ அல்லாஹ்வும் அவரது பணியில் மும்முரமாக இருப்பான். எவர் ஒரு முஸ்லிமுடைய ஏதாவது துன்பத்தை அவரிடமிருந்து நீக்குவாரோ அல்லாஹ் மறுமை நாளின் துன்பங்களில் ஒரு துன்பத்தை அவரிடமிருந்து அகற்றிவிடுவான். மேலும், எவர் ஒரு முஸ்லிமுடைய குறையை திரையிடுவாரோ அல்லாஹ்வும் கியாமத் நாளன்று அவரது குறையின் மீது திரையிடுவான்.

(2444) ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது சகோதரருக்கு உதவி செய்யுங்கள்; அவர் அநீதியாளராக இருந்தாலும் அல்லது அநீதியிழைக்கப்பட்டவராக இருந்தாலும் சரியே. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அநீதியிழைக்கப்பட்டவருக்கு நாங்கள் உதவி செய்வோம்; ஏனெனில், அவர் அநீதியிழைக்கப்பட்டவர். ஆனால், அநீதியாளராக இருந்தால் பின்னர் அவருக்கு எப்படி உதவி செய்ய முடியும்? என்று ஸஹாபா பெருமக்கள் கேட்டனர். அதற்கு, அவரது கரத்தை பிடித்து விடுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் மஸாலிம், 2008-ம் ஆண்டு பதிப்பு)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## பொறுப்பாளர்களின் கடமைகளும் & பொறுப்புகளும்

**சமுதாயத்தின் தலைவர் அதன் தொண்டர் ஆவார் என்ற இந்த சிந்தனை நமது ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் இருக்க வேண்டும்**

**பொறுப்பாளர்கள் தங்களிடத்தில் பணிவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்குரிய உரிமையை செலுத்தியவாறு அவற்றை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள்**

**நமது ஜமாஅத் அமைப்பிலும் ஒவ்வொரு பொறுப்பும் அல்லது எந்தத் தொண்டில் ஒருவர் நியமிக்கப்படுவாரோ அந்தத் தொண்டும் அமானிதம் ஆகும்**

**ஒருவர் ஒரு பொறுப்பிற்கு ஆசை கொண்டிருக்கின்றார் என்றால் பின்னர் ஜமாஅத் அமைப்பிலும், ஒவ்வொரு தேர்தல் தளத்திலும் அவரை நிராசையடையச் செய்ய வேண்டும். மேலும் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் நீதியுடன் தமது தேர்ந்தெடுத்தலுக்கான உரிமையை பயன்படுத்த வேண்டும்.**

**அல்லாஹ்வே! அருள் செய்வாயாக! என்று ஒவ்வொரு பொறுப்பாளரும் தமது துறையின் மேன்மைக்காக குறைந்தபட்சம் இரண்டு ரக்அத் நஃபில் தினமும் தொழ வேண்டும்**

**ஜமாஅத் அமைப்பு என்பது ஒருவர் மற்றவருடன் அனுதாபத்தின் உணர்வுகளை உருவாக்குவதற்காகவும், ஒருவர் மற்றவரை கருத்தில் கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 ஆகஸ்ட் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **ஸஹுர்** மாதம் **18 ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான் :

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰۤى اَهْلِهَا

(அந்நிஸா: 59)

அதாவது நீங்கள் அமானிதங்களை (அதாவது நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றை) அவற்றிற்கு தகுதியானவர்களிடம் ஒப்படையுங்கள் என்று அல்லாஹ் கட்டளை வழங்குகின்றான்.

அடுத்து, ஒரு ஹதீஸில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்களின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது அவர்களை கண்காணிக்கும் ஏதாவது (ஒரு) பதவி வழங்கப்பட்டிருந்தால் அதுவும் ஓர் அமானிதம் ஆகும். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் அமாரா, ஹதீஸ் எண் : 4719)

எனவே இந்த அடிப்படையில் நமது ஜமாஅத் அமைப்பிலும் ஒவ்வொரு பொறுப்பும் அல்லது எந்தத் தொண்டில் எவர் நியமிக்கப்படுவாரோ அந்தத் தொண்டும் அமானிதம் ஆகும். நமது ஜமாஅத்தில், ஜமாஅத் அமைப்பில் எல்லா மட்டத்திலும் உள்ளூர் மட்டம் முதல் தலைமையகம் மற்றும் தேசிய மட்டம் வரை நாம் பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்கின்றோம். அதேபோன்று தலைமையக பொறுப்புகள் இருக்கின்றன. பின்னர் கிளை அமைப்புகளில் அதே வரிசைகிரமத்தின் அடிப்படையில் பொறுப்புகளில் நியமிக்கப்படுகின்றனர். தலைமையக அமைப்பு உள்ளது அல்லது கிளை அமைப்புகளுக்கான அமைப்பு உள்ளது. ஒவ்வோர் இடத்திலும் அடிமட்டத்திலிருந்து தலைமையக மட்டம் வரை பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். மேலும், பொதுவாக இந்த நடைமுறை தேர்தல் மூலமாக நடக்கின்றது. எனவே நீங்கள் பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்கும்போது வெளிப்படையான பார்வையில் அதாவது உங்களது பார்வையில் அந்த பணிக்கு சிறந்தவரையும், தமது பணியின் அமானிதத்திற்குரிய உரிமையை வழங்கக் கூடிய நபரையும் நீங்கள் தேர்ந்தெடுங்கள் என்பது அல்லாஹ்வின் கட்டளை ஆகும்.

தேர்தலின் போது ஆகுமற்ற முறையில் தமது உறவினர்களுக்கு ஆதரவளிப்பது அல்லது உறவுகளை கருத்தில் கொள்வது போன்றவை கூடாது. சிலமுறை சில பொறுப்பாளர்கள் தலைமையகம் அல்லது காலத்தின் கலீஃபாவின் புறமிருந்து நேரடியாகவும் நியமிக்கப்படுகின்றனர். அந்தப் பணிக்கு சிறந்த நபரை நியமிக்க வேண்டும் என்று ஆய்வு செய்து (நியமிப்பதற்கு) முயற்சி செய்யப்படுகின்றது. ஆனால், சிலமுறை அனுமானம் தவறானதாகவும் ஆகிவிடக் கூடும் அல்லது பதவியை பெற்ற பிறகு (அந்த) மக்களின் இயல்பு மாறிவிடுகின்றது. மேலும், எந்தப் பணிவும், உழைப்பும், நீதியுடன் பணி செய்ய வேண்டிய ஆன்மாவும் ஒரு பொறுப்பாளரிடம் இருக்க வேண்டுமோ அது இருப்பதில்லை. பின்னர் அதுபோன்ற நபரின் செயல்பாடுகளுக்கான பொறுப்பு அவர் மீதே இருக்குமே தவிர தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் மீது இருக்காது.

எவ்வாறு இருப்பினும், நாம் நம்மில் சிறந்த மக்களை தேர்ந்தெடுக்க வேண்டும்; மேலும் நாம் துஆ செய்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே நமது முயற்சியாக இருக்க வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், எந்த நபர் ஒரு பொறுப்பில் நியமிக்கப்படுகின்றாரோ அவர் தான் பொறுப்பாளராக ஆகிவிடவேண்டும் என்பதற்காக மட்டுமே முந்திக் கொண்டு வருபவராக இருக்கக் கூடாது என்று பொதுவாக முயற்சி செய்யப்படுகின்றது. ஒருவேளை சிலமுறை அதுபோன்ற நபரின் பெயர் ஜமாஅத்தின் உறுப்பினர்களின் புறமிருந்து ஒரு பொறுப்பிற்காக ஆலோசனையாக வந்தாலும் கூட பின்னர் தலைமையகம் அல்லது காலத்தின் கலீஃபாவிற்கு அவருடைய நிலைமைகளைக் குறித்து தெரிந்திருந்தால் அந்த நபர் பணியில் அமர்த்தப்படுவதில்லை. மேலும், இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு முற்றிலும் பொருத்தமானதாகும்.

ஓர் அறிவிப்பில் உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் இரண்டு நபர்கள் வந்தனர். மேலும், எங்களிடம் இன்ன பொறுப்பை ஒப்படைத்து விடுங்கள்; நாங்கள் அதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவோம் என்று அவர்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் எந்த நபரை ஒரு பொறுப்பில் நியமிக்கின்றேனோ அவருக்கு அல்லாஹ் உதவி செய்கின்றான்.

மேலும், எவர் ஆசைப்பட்டு சுயமே பணியை தனது பொறுப்பில் எடுத்துக் கொள்கின்றாரோ பின்னர் அவருக்கு அல்லாஹ்வின் புறமிருந்து உதவி கிடைப்பதில்லை (ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் அஹ்காம், ஹதீஸ் எண்: 7146) அவரது பணியில் அருள் கிடைப்பதில்லை.

எனவே ஒருபோதும் பதவிக்கு ஆசைபட்டு பதவியை பெறுவதற்கு முயற்சி செய்யக் கூடாது. ஆயினும், மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான ஆர்வம் கண்டிப்பாக இருத்தல் வேண்டும். எனக்கு வாய்ப்பு கிடைத்தால் நான் மார்க்கத் தொண்டாற்றுவேன்; மேலும் அந்தத் தொண்டு எந்த வடிவில் கிடைத்தாலும் அதனை செய்வதற்கு முழுமையாக முயற்சி செய்வேன் (என்று எண்ணம் கொள்ள வேண்டும்). எனவே பதவிக்கு ஆசைபடுவது, ஒரு பணிக்கு கண்காணிப்பாளராக ஆகி அதனை செய்வதற்கு ஆசை கொள்வது விரும்பத்தக்கது அல்ல. ஆயினும், தொண்டாற்றுவதற்கான உணர்வு இருக்க வேண்டும். அது எந்த வடிவில் இருந்தாலும் சரி. இது விரும்பத்தக்க விஷயம் ஆகும்.

**எனவே இந்த விஷயங்களை தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். உங்களது பார்வையில் ஒரு தொண்டிற்கு எவர் மிகவும் தகுதியான நபராக இருப்பாரோ அவரை நீங்கள் துஆ செய்த பிறகு தேர்ந்தெடுங்கள் என்ற திருக்குர்ஆனின் கட்டளையையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலையும் எப்போதும் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.** இரண்டாவதாக, ஒருவர் ஒரு பொறுப்பிற்கு ஆசை கொண்டிருக்கின்றார் என்றால் பின்னர் ஜமாஅத் அமைப்பிலும், ஒவ்வொரு தேர்தல் தளத்திலும் அவரை (அந்த விஷயத்தில்) நிராசையடையச் செய்ய வேண்டும். மேலும் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் நீதியுடன் தமது தேர்ந்தெடுத்தலுக்கான உரிமையை பயன்படுத்த வேண்டும்.

பொதுவாக தேர்தலின் வழிமுறை இவ்வாறு உள்ளது. அதாவது, தேசிய தலைமையக மட்டத்தில் பொறுப்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான கருத்துகள் தேர்தலின் முடிவுகளுடன் காலத்தின் கலீஃபாவிற்கு முன்னால் சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும், காலத்தின் கலீஃபாவிற்கு இந்த அதிகாரம் இருக்கின்றது. அதாவது அவர் விரும்பினால் அதிகமான கருத்துகளுடன் (வாக்குகளுடன்) முன்மொழியப்பட்டிருக்கும் பெயரை தேர்ந்தெடுப்பார் அல்லது குறைவான வாக்குகளைப் பெறக் கூடிய ஒருவரை தேர்ந்தெடுப்பார். சிலமுறை அந்த நபரைக் குறித்து சில தகவல்கள் மற்றும் சில நிலைமைகள் தலைமையகம் மற்றும் காலத்தின் கலீஃபாவிற்கு இருக்கின்றன. அந்த தகவல் சாதாரண நபருக்கு இருப்பதில்லை. எனவே அதிகப்படியான கருத்துகளை (அதாவது வாக்குகளை) பெறக் கூடியவரை கண்டிப்பாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவசியமில்லை.

இதேபோன்று தேசிய ஜமாஅத்துகளுக்கான தேர்தலில் விதிமுறைகளுக்கேற்ப சில ஜமாஅத்துகளின் ஒப்புதலை அந்த நாட்டின் தலைமையக நிர்வாகம் வழங்குகின்றது. மேலும் ஒருவேளை சில மாற்றங்கள் செய்ய வேண்டியது இருந்தால் பின்னர் காலத்தின் கலீஃபாவிடம் (அனுமதி) கேட்கின்றனர். எவ்வாறிருப்பினும், எந்த அளவிற்கு சாத்தியமோ (அந்த அளவிற்கு) நல்ல பணி செய்யக் கூடிய பொறுப்பாளர்கள் கிடைத்து விட வேண்டும் என்று முயற்சி செய்யப்படுகின்றது. ஆனால், சில இடத்தில் எவ்வகையான மக்கள் இருப்பார்களோ அவர்களில் இருந்தே தேர்ந்தெடுக்க நேரிடுகின்றது. எவ்வாறு இருப்பினும், தமது தகுதிகளுக்கேற்ப அமானிதங்களுக்கான உரிமையை சிறந்த வடிவில் செலுத்தக் கூடியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விஷயத்தை தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். ஒருபோதும் (பதவிக்கு) ஆசைப்படக் கூடியவர்களை அல்லது நட்பின் காரணமாக அல்லது உறவுகளின் காரணமாக அல்லது பெரும்பாலான கைகள் ஒருவருக்கு ஆதரவாக தூக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்துவிட்டு எனவே நானும் எனது கையை தூக்கி விடுகின்றேன் என்றோ வாக்களிக்கக் கூடாது. அவ்வாறு செய்வது அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிரானதாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு எதிரானதாகும்.

ஜமாஅத்தின் தலைமையக அமைப்பின் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறவில்லை தான்; தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. ஆயினும், கிளை அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெற உள்ளன. சில இடத்தில் அன்ஸாருல்லாஹ், குத்தாம், மற்றும் லஜ்னாவுடைய தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எனவே எவரெல்லாம் மஜ்லிஸுடைய உறுப்பினர்களாக ஆகுவாரோ அவர் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப தனது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கும், துஆ செய்த பிறகு நீதியுடன் தனது பார்வையில் சிறந்த நபருக்கான பரிந்துரையை காலத்தின் கலீஃபாவிடம் முன்வைப்பதற்கும் இந்த அமைப்புகளின் உறுப்பினர்கள் முயற்சி செய்ய வேண்டும். நாம் நீதியுடன் நமது இந்த கடமையை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆகிவிடும்போதுதான் ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் நமது பங்களிப்பு நேர்மறையானதாக இருக்கும். மேலும் நாம் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவர்களாக ஆகிவிடுவோம்.

இதன் பிறகு நான் பொறுப்பாளர்களுக்கும் அவர்களின் பொறுப்புகளைக் குறித்து கவனமூட்ட விரும்புகின்றேன். நிச்சயமாக ஜமாஅத் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். எனினும், அவர்களுக்கு தங்களது பொறுப்புகளுக்கான உணர்வு எப்போதும் இருக்க வேண்டும். மேலும் எப்போதும் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, அல்லாஹ் நமக்கு தொண்டாற்றுவதற்கு வாய்ப்பை வழங்கியுள்ளான். எனவே அவனது அருளைப் பெறுவதற்காக நாம் எல்லா வகையான சுய நலனிற்கும் அப்பாற்பட்டு நமது பணியை அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக நிறைவேற்ற வேண்டும்.

சில பொறுப்பாளர்களைக் குறித்து அவர்களின் நடத்தைகளில் பணிவு இருப்பதில்லை என்றும், பதவிக்கு (வந்த) பிறகு தான் ஓர் அசாதாரண மனிதர் ஆகிவிட்டது போன்ற வெளிப்பாடு அவர்களிடம் இருக்கின்றது என்றும் புகார்கள் வருகின்றன. ஃபிர்அவ்னின் தன்மை தோன்றிவிட்டது என்று நான் கூறவில்லை. ஆயினும், எவ்வாறு இருப்பினும் தங்களை உயர்ந்தவர்களாக கருதிவிடுகின்றனர். குறிப்பாக எந்த பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனரோ ; மேலும் அவர்களில் வாழ்வை அர்ப்பணித்தவர்களும் இருக்கின்றனர். அவர்களிடம் இந்த விஷயம் இருக்குமென்றால் பின்னர் முற்றிலும் பொறுத்துக் கொள்ள முடியாது. பொதுச் செயலாளராக நியமிக்கப்படும் வாழ்வை அர்ப்பணித்தவர்களில் சிலரைக் குறித்து அவர்களிடம் ஆணவம் மிக்க நடத்தை உள்ளது; ஸலாம் கூட கூறுவதில்லை என்று அவர்களைக் குறித்து புகார்கள் உள்ளன. இப்படிப்பட்ட நடத்தையை வெளிப்படுத்தக் கூடியவர்கள் தங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள். மேலும், அல்லாஹ் தொண்டாற்றுவதற்காக வாய்ப்பு வழங்கியுள்ளான் என்று பூமியில் குனியுங்கள். மேலும், ஒவ்வொரு சிறியவர் மற்றும் பெரியவரையும் மிகவும் அன்புடனும் பணிவுடனும் சந்தியுங்கள். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தொண்டாற்றுவதற்கு நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்களே தவிர அவர்கள் மீது எந்த வகையான அதிகாரத்துவத்தின் அச்சத்தையும் ஏற்படுத்துவதற்காக அல்ல.

பின்னர் சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால் அவர்கள் தமது பணிகளையும் சரியான முறையில் நிறைவேற்றுவதில்லை. இங்கு என்னிடமிருந்தும் சில விவகாரங்கள் அறிக்கை கேட்டு அனுப்பப்படும்போது நினைவூட்டப்படாத வரை, மீண்டும் மீண்டும் கேட்காத வரை அவை அவர்களின் அலமாரியில் கிடக்கின்றது; ஆறு மாதங்கள், ஒரு வருடம் கழித்து ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதி எங்களிடம் தவறு ஏற்பட்டு விட்டது;

எங்களால் குறித்த நேரத்தில் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று கூறி விடுகின்றனர். தலைமையகத்தின் கடிதங்களுடன் மற்றும் காலத்தின் கலீஃபாவின் கடிதங்களுடன் அவர்களின் நடைமுறை இவ்வாறு இருக்கும் போது பின்னர் ஜமாஅத்தின் சாதாரண நபருடன் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள் என்று அவர்களிடம் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? இந்த மக்கள் தங்களை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவர்கள் தொண்டிலிருந்து நீக்கப்படுவார்கள்.

பொறுப்பாளர்களுக்கு அவர்களின் பொறுப்புகள் குறித்தும் நான் கவனமூட்ட விரும்புவேன்.

ஒன்று, பொறுப்பாளர்கள் தங்களிடத்தில் பணிவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்குரிய உரிமையை செலுத்தியவாறு அவற்றை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

இறைவன் நமது கண்காணிப்பாளனாக இருக்கின்றான்; அவன் நமது ஒவ்வோர் அசைவையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற எண்ணம் அவர்களின் மனதில் எப்போதும் இருக்க வேண்டும். ஒரு பதவிக் கிடைத்த பிறகு நாம் எல்லா வகையான கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை பெற்று விடவில்லை ; மாறாக, நாம் அல்லாஹ்வின் பிடியின் கீழ் அதிகம் வந்து விட்டோம் என்ற எண்ணம் இருக்க வேண்டும். மக்கள் நம்மை தேர்ந்தெடுத்துள்ளனர்; நம் மீது நம்பிக்கை வைத்து காலத்தின் கலீஃபா இந்தத் தொண்டிற்காக நமக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். எனவே அந்த நம்பிக்கையை நிலைபெறச் செய்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மேலும், நமது அனைத்து திறமைகளையும் இந்த தொண்டினை சிறந்த வடிவில் நிறைவேற்றுவதற்காக செலவிட வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இந்த சிந்தனை இருந்தால் பின்னர் அப்போதுதான் சரியான பணியை செய்யக் கூடிய ஆன்மா உருவாகும். மேலும், ஜமாஅத் நபர்களின் ஒத்துழைப்பும் இருக்கும். சில துறைகளில் ஜமாஅத் நபர்கள் ஒத்துழைப்பதில்லை என்று பெரும்பாலான பொறுப்பாளர்கள் புகார் செய்கின்றனர். எந்த நபர்களை சுயமே தொண்டிற்காக தேர்ந்தெடுத்துள்ளார்களோ அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் நிச்சயமாக உறுப்பினர்களின் பொறுப்பாகும்.

ஆயினும் அத்துடன் தமது சிறந்த முன்மாதிரிகளை மக்களுக்கு முன்னால் நிலைநாட்டுவது பொறுப்பாளர்களின் பணியுமாகும். தற்போது ஒரு பொறுப்பாளரைக் குறித்து அவர் தமது வருமானத்திற்கேற்ப சந்தா கொடுப்பதுமில்லை ; குறைந்த வருமானத்தின் அடிப்படையின் சந்தா கொடுப்பதற்கு அனுமதி பெற விரும்புவதுமில்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது. எனவே இது போன்ற நபர் பின்னர் மற்றவர்களுக்கு என்ன முன்மாதிரியை முன்வைப்பார்? பொருள் தியாகம் செய்யுங்கள் என்று எவ்வாறு மற்றவர்களுக்கு அவர் கூறுவார்? எனவே (பொறுப்பாளர்களுடைய) தமது சொந்த முன்மாதிரிகள் மிகவும் அவசியமாகும். மிகவும் அதிகமாக இஸ்திக்ஃபார் செய்வதற்கு அவசியம் உள்ளது. அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்வதற்கு அவசியம் உள்ளது. தமது நிலைமைகளை ஆய்வு செய்வது அவசியம் ஆகும். ஒரு செயலாளர் சுயமே ஐவேளை தொழுகைகளை ஜமாத்துடன் நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் பின்னர் தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று அவர் மற்றவர்களுக்கு எவ்வாறு அறிவுரை வழங்கமுடியும்? அதேபோன்று வாழ்வை அர்ப்பணித்த ஒருவர் மற்றும் முரப்பி சுயமே நஃபில் (அதாவது உபரியான இறை வணக்கங்களை) நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் பின்னர் இறை வணக்கங்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அவர் எவ்வாறு அறிவுரை செய்ய முடியும்? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதன் பக்கமே நமக்கு கவனமூட்டியுள்ளார்கள். அதாவது, அஹ்மதி அல்லாத மவ்லவி அறிவுரை செய்கின்றார்; ஆனால், அவரது அமல் அந்த அறிவுரைக்கேற்ப இருப்பதில்லை. எனவே அவரது கூற்றுகளில் தாக்கம் ஏற்படுவதில்லை.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 67 - 1984-ம் ஆண்டு பதிப்பு)

எனவே ஒவ்வொரு நொடியையும் மிகவும் அச்சத்துடன் கழிப்பதற்கு நமக்கு அவசியம் உள்ளது. ஒவ்வொரு அடியையும் மிகவும் யோசித்து யோசித்து எடுத்து வைப்பதற்கு அவசியம் உள்ளது. இது நடைபெறும்போதுதான் நாம் நமது அமானிதங்களுக்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக இருப்போம். தர்பிய்யத் செயலாளர்கள் தங்களது முன்மாதிரிகளை நிலைநாட்டியவாறு அன்புடனும், நேசத்துடனும் ஜமாஅத்திற்கு தர்பிய்யத் வழங்கினால் பின்னர் ஜமாத் உறுப்பினர்களிடத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதலை உருவாக்க முடியும். அல்லாஹ்வே! அருள் செய்வாயாக! என்று ஒவ்வொரு பொறுப்பாளரும் தமது துறையின் மேன்மைக்காக குறைந்தபட்சம் இரண்டு ரக்அத் நஃபில் தினமும் தொழ வேண்டும். தர்பிய்யத் துறை செயல் மிக்கதாக ஆகிவிட்டால் பின்னர் மற்ற துறைகள் எனது அனுமானத்தின் அடிப்படையில் குறைந்தபட்சம் எழுபது சதவிகிதம் சுயமாக சிறந்த வடிவில் பணி செய்யத் துவங்கி விடும்.

எனவே பொறுப்பாளர்கள் தமது முன்மாதிரிகளை நிலைநாட்ட வேண்டும் என்பதை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். குறிப்பாக ஜமாஅத் அமீர்மார்கள், ஜமாஅத் தலைவர்கள் மேலும் குறிப்பாக தர்பிய்யத் செயலாளர்கள். மற்றவர்களும் இதனை மேற்கொள்ள வேண்டும். மற்றவர்கள் அவ்வாறு செய்யவில்லையென்றாலும் எந்த வித்தியாசமும் ஏற்படாது என்பதில்லை. நான் இந்த பொறுப்பாளர்களுக்கு குறிப்பாக கவனமூட்டுவதன் அர்த்தம் மற்றவர்கள் அவ்வாறு செய்யவில்லையென்றாலும் எந்த வித்தியாசமும் ஏற்படாது என்பது ஒருபோதும் பொருள் அல்ல. ஒவ்வொரு நபரும் (அவ்வாறு) செய்யும்போது தான் ஜமாஅத்தின் முன்னேற்றம் சரியான முறையில் இருக்கும். தங்களது முன்மாதிரியை (பொறுப்பாளர்கள்) வெளிப்படுத்தவில்லையென்றால் எந்த வித்தியாசமும் ஏற்படாது என்பதில்லை. பெரும் வித்தியாசம் ஏற்படுகின்றது. ஒவ்வொரு பொறுப்பாளரின் செயலாலும் வித்தியாசம் ஏற்படுகின்றது. (ஒரு) செயலாளர் சுயமே தமது சந்தாக்களை கவனத்துடன் செலுத்துவதற்கான உரிமையை செலுத்தாமல் இருக்கின்றார் என்றால் பின்னர் ஜமாஅத் உறுப்பினர்கள் எவ்வாறு தப்லீஃக்கில் செயல் மிக்கவர்களாக இருப்பார்கள்? எனவே ஒவ்வொரு துறையும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அதேபோன்று கிளை அமைப்புகளின் தலைவர்களுக்கான பொறுப்புகள் உள்ளன. மற்ற செயற்குழு உறுப்பினர்களின் பொறுப்புகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். கிளை அமைப்புகளிலும் எல்லா மட்டத்திலும் தங்களை செயல்மிக்கதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

சில இடங்களிலிருந்து சத்ர் லஜ்னாவைக் குறித்து அவரின் செயல்பாடு சரியில்லை என்று புகார் வருகின்றது. புதிய அஹ்மதிப் பெண்களுடனான சிலருடைய நடத்தை சரியாக இல்லை. (புதிய அஹ்மதிகளாகிய) அவர்களை ஈர்ப்பதற்கு பகரமாக அவர்கள் வெறுண்டு ஓடுவதற்கு காரணியாக ஆகிக் கொண்டு இருக்கின்றனர். நாங்கள் உங்களை சீர்திருத்துவோம் என்று மிகவும் தவறான வழிமுறைகளில் அந்த புதிய அஹ்மதிப் பெண்களிடம் கூறப்படுகின்றது. ஆனால் என்னுடைய பார்வையில் இப்படிப்பட்ட சத்ர் லஜ்னாவையே சீர்திருத்த வேண்டும். இது எதனால் நடக்கின்றது என்றால் சில மக்களிடம் நிரந்தரமாக பொறுப்பு இருந்து கொண்டு வருகின்றது. யார் தகுதியானவர்? யார் தகுதியற்றவர்? என்பதை லஜ்னா உறுப்பினர்களும் பார்ப்பதில்லை. அதன் விளைவாகவே சீர்கேடுகள் உருவாகின்றன. பின்னர் சீர்கேடுகள் உருவாகும் போது புகார்கள் வருகின்றன. அதனால் மற்ற மக்களின் ஈமானில் தடுமாற்றம் ஏற்படுகின்றது. தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள்

சுயமே தங்களது வாக்குரிமையை நீதியுடனும், அல்லாஹ்வின் மீது அச்சம் கொண்டவாறும் செலுத்தவில்லையென்றால் பின்னர் புகாரும் செய்யக் கூடாது. எனவே தேர்தல் நேரத்தில் அமானிதங்களுக்கு தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தால் பின்னர் புகார்களும் முற்றுப் பெற்று விடும். இல்லையென்றால் நாம் நம்மை சீர்திருத்தம் செய்ய முடியாது.

நான் பொறுப்பாளர்களிடமும் இதனைக் கூறுவேன். அதாவது அவர்கள் மேடைகளில் அமர்வதற்காக இல்லை. ஒவ்வொரு பொறுப்பாளரும் ஒரு சாதாரண ஊழியராக திகழ்ந்து தனது டியூட்டியை நிறைவேற்றிட வேண்டும்.

ஒரு புதிய அஹ்மதிப் பெண்மணி என்னிடம் கூறினார். அவர் இந்த ஜல்ஸாவில் வெளியிலிருந்து வந்திருந்த பெண்மணியாக இருந்தார். இங்கு ஜல்ஸாவில் ஒரு விஷயம் என்னை மிகவும் தாக்கத்திற்குள்ளாக்கியது என்று கூறினார்: சதர் லஜ்னா டிஸிப்லின் (ஒழுங்குபடுத்துதல் என்ற) டியூட்டியில் மற்ற சிறுமிகளுடன் இணைந்து டியூட்டி கொடுத்துக் கொண்டிருந்ததை நான் கண்டேன்.

ஆக, இது எவ்வாறு இருப்பினும் அந்த சதர் லஜ்னாவின் கடமையாக இருந்தது. அவர் செய்த இந்தப் பணி ஒன்றும் அசாதாரண பணி கிடையாது. அவர் டியூட்டி கொடுக்கவில்லையென்றால், மேலும் எல்லா இடத்திலும் கண்காணிக்கவில்லையென்றால் அப்போது அவர் குற்றவாளி ஆவார். சதர் இவ்வாறு சுயமே டியூட்டி கொடுக்கவில்லையென்றால் பரிசோதிக்கவில்லையென்றால் பின்னர் அவர் தனது அமானிதத்திற்கான உரிமையை செலுத்தவில்லை. .

ஆனால், எவ்வாறு இருப்பினும் எவர்கள் தமது அமானிதத்திற்கான உரிமையை செலுத்தக் கூடிய பொறுப்பாளர்களாக இருக்கின்றனரோ அவர்கள் மற்றவர்களின் சீர்திருத்தத்திற்கான காரணியாகவும் ஆகின்றனர். மேலும் சேவகி ஆகிவிடுகின்றனர்.

சமுதாயத்தின் தலைவர் அதன் தொண்டர் ஆவார் என்ற இந்த சிந்தனை நமது ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் இருக்க வேண்டும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றாகும். இதேபோன்று சாதாரண நிலைமைகளிலும் ஜமாஅத் உறுப்பினர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு வைத்து அவர்களுடன் தனிப்பட்ட தொடர்பை அதிகரிப்பது ஒவ்வொரு பொறுப்பாளரின் பணியுமாகும். அவர்களுடைய இன்பத்திலும், துன்பத்திலும் பங்கு பெற வேண்டும். ஜமாஅத் அமைப்பு என்பது ஒருவர் மற்றவருடன் அனுதாபத்தின் உணர்வுகளை உருவாக்குவதற்காகவும், ஒருவர் மற்றவரை கருத்தில் கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது என்ற உணர்வை ஒவ்வொரு ஜமாஅத் உறுப்பினரிடத்திலும் உருவாக்க வேண்டுமே தவிர ஒருவர் அதிகாரி ஒருவர் பணியாளர் ஒருவர் உயர்ந்தவர், ஒருவர் சிறியவர் என்ற உணர்வை உருவாக்கக் கூடாது. நாம் அனைவரும் ஒருவர் ஆவோம். சகோதரர்கள் ஆவோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணியை நிறைவேற்றுவதற்காக அவரவர் தகுதிகளுக்கேற்ப முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

இந்த சிந்தனைதான் ஜமாஅத் அமைப்பை ஓர் அழகிய அமைப்பாக மாற்ற முடியும். இந்த சிந்தனைதான் நம்மை அல்லாஹ்வையும் நெருங்கச் செய்ய முடியும். இந்த எண்ணம் கொள்ளாமல் இருந்தால் மேலும் இதற்கெதிராக அமல் செய்தால் பின்னர் நாம் அல்லாஹ்வின் கோபத்தை சம்பாதிக்கக் கூடியவர்களாக இருப்போம்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் முஅகல் பின் யஸ்ஸார் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எவரை அல்லாஹ் மக்களின் கண்காணிப்பாளராகவும் பொறுப்பாளராகவும் ஆக்கியுள்ளானோ அவர் மக்களை கண்காணிப்பதிலும் தமது கடமைகளை செலுத்துவதிலும் நன்மையை நாடுவதிலும் சோம்பலை வெளிப்படுத்துகின்றார் என்றால் பின்னர் அவருடைய மரணத்தின் போது அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்தை ஹராமாக்கி விடுகின்றான். மேலும் அவருக்கு சொர்க்கத்தை அருள மாட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன். (ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் அஹ்காம், ஹதீஸ் எண்: 7150, 7151)

இது மாபெரும் எச்சரிக்கையாகும். மிகவும் அச்சத்திற்குரிய இடம் ஆகும். மிகவும் கவலை கொள்ளத் தக்க விஷயம் ஆகும்.

அடுத்து, ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் ஒவ்வொருவரும் பொறுப்பாளர் ஆவார். அவர் தமது குடிமக்களைக் குறித்து விசாரிக்கப்படுவார்.

இது நீண்ட அறிவிப்பாகும். வேறு இடங்களிலும் கண்காணிப்பாளர்களைப் பற்றியும் குறிப்பு வருகின்றது. ஆனால், (பொறுப்பாளர்களாகிய) நம்மைக் குறித்த அந்த விஷயத்தை நான் படித்து விடுகின்றேன்.

அமீரும் கண்காணிப்பாளர் ஆவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி. கிதாபுல் அஹ்காம், ஹதீஸ் எண்: 7138)

அதாவது பொறுப்பாளர்களும் கண்காணிப்பாளர்கள் ஆவர். அவர்கள் கண்காணிப்பாளர்கள் ஆவர் என்ற இந்த விஷயத்தில் பொறுப்பாளர்களும் அடங்குவர். ஒவ்வொருவரிடமும் அவரது குடிமக்களைக் குறித்து கேட்கப்படும். குடிமக்கள் என்பதன் பொருள் எவர்கள் மீது ஆட்சி அதிகாரம் செய்யப்படுகின்றதோ அவர்கள் அல்ல. மாறாக, எவர்களுக்கு உதவி செய்வதற்கும், எவர்களின் சீர்திருத்தத்திற்கும், எவர்களின் மேன்மைக்கான பொறுப்பும் சுமத்தப்பட்டுள்ளதோ அத்தகைய மக்களைக் குறித்து விசாரிக்கப்படும்.

ஆக, இதே ஹதீஸில் உதாரணமும் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது கணவர் தனது குடும்பத்தின் கண்காணிப்பாளர் ஆவார். (மனைவியாகிய) பெண் தனது பிள்ளைகளின் கண்காணிப்பாளர் ஆவார். (ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் அஹ்காம், ஹதீஸ் எண்: 7138)

எனவே அதிகாரம் செலுத்துவதற்காக ஒன்றும் கண்காணிப்பாளர் இல்லை. அவர்களின் தர்பிய்யத்திற்காக, அவர்களின் மேன்மைக்கான திட்டங்களை வகுப்பதற்காக ,, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கண்காணிப்பாளர் இருக்கின்றார். எனவே ஒருவேளை இந்தப் பொறுப்பை நிறைவேற்றாமல் அவர் இருக்கின்றனர் என்றால் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப சொர்க்கம் என்பது (அவருக்கு) ஹராம் ஆகிவிடுகின்றது. எனவே எந்த மக்கள் கண்காணிப்பாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனரோ அவர்கள் சரியான முறையில் பணியாற்றவில்லையென்றால் மேலும் தமது பகுதிகளில் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதிகளாக, பெயர் தாங்கி பிரதிநிதிகளாக அமர்ந்து இருக்கின்றனர் என்றால் அவர்கள் காலத்தின் கலீஃபாவிற்கும் அவப் பெயர் சேர்க்கின்றனர். மேலும், காலத்தின் கலீஃபாவையும் பாவம் செய்தவராக ஆக்குகின்றனர்.

நான் உதாரணம் கொடுத்திருந்தது போன்று ரிப்போர்ட்களை மாதக் கணக்கில் அனுப்பாமல் இருக்கின்றனர். அதாவது, உள்ளபடியே அவர்கள் தங்களை சீர்திருத்திக் கொள்ளவில்லை என்றால் பின்னர் அவர்களை தொண்டாற்றுவதிலிருந்து நீக்கி விடுவதை தவிர அப்படிப்பட்ட மக்கள் தொடர்பாக இனி எனக்கு வேறு வழி இல்லை. பின்னர் நான் அவர்களின் பாவங்களில் இணைந்து விடாமல் இருப்பேன். எனவே நானும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருகின்றேன். இந்த மக்களும் இஸ்திக்ஃபார் செய்யட்டும்; மேலும் தங்களை சீர்படுத்திக் கொள்ளட்டும்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

பதவியை பெறுவதற்காக மட்டும் பொறுப்புகளை நிர்வகிப்பவர்களாக இல்லாமல் எப்போதும் தங்களின் பொறுப்புகளை புரிந்தவாறு தமது பணியை நிறைவேற்றக் கூடிய வலிமையான உதவியாளர்களை அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு அல்லாஹ் எப்போதும் வழங்குவானாக.

எந்த நபர் முஸ்லிம்களின் கூட்டு விவகாரங்களின் பொறுப்பாளராக இருக்கின்றாரோ அவர் மக்களின் தேவைகளை நிறைவேற்றாத வரை அவரது தேவைகளையும், நோக்கங்களையும் அல்லாஹ் நிறைவேற்ற மாட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய இந்த வழிகாட்டலின் பக்கம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

ஆக, எங்கு இந்த பொறுப்பு காலத்தின் கலீஃபாவிற்கு உள்ளதோ அங்கு தத்தமது ஜமாஅத்துகளில் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதிகளாக இருக்கின்ற அந்த அனைத்து பொறுப்பாளர்களுக்கும் இருக்கின்றது. மேலும் இது பொறுப்பாளர்களின் மீதான மாபெரும் பொறுப்பு ஆகும். செயற்குழு கூட்டங்களில் மட்டும் கலந்து கொண்டு தமது கருத்துகளை கூறிவிட்டு, கூட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு, நாம் நமது கடமையை நிறைவேற்றிவிட்டோம் என்று கருதிக் கொள்வது போதுமானதல்ல. மக்களின் நன்மைக்காக திட்டங்கள் வகுப்பதும், பின்னர் அதன்படி அமல் செய்ய வைப்பதும் மிக,மிக அவசியமான விஷயம் ஆகும். நம்மிடம் என்ன வசதிவாய்ப்புகள் உள்ளனவோ அதற்குள் இருந்து கொண்டவாறு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு என்ன சிறந்த வழி கிடைக்குமோ அதனை கண்டறிய வேண்டும். அதற்காக உலகியல் தேவைகளை நிறைவேற்றுவதற்காக உமூரே ஆமா என்ற துறையும் உள்ளது. மேலும் ஸின்அத் வ திஜாரத் என்ற துறையும் உள்ளது. மேலும் இவ்வாறு கிளை அமைப்புகள் அதற்காக தமது பங்களிப்பை செலுத்த வேண்டும். நிச்சயமாக நம்மிடம் குறைவான வசதிவாய்ப்புகளே இருக்கின்றன. ஆயினும், என்ன இருக்கின்றதோ அவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தி சரியான திட்டங்களை வகுத்தால் ஏராளமானவர்களுக்கு உதவி செய்ய முடியும். இன்றைய நாட்களில் ஏறக்குறைய அனைத்து ஜமாத்துகளுக்கும் ஒரு சவாலாக ஆகியுள்ள துறை ரிஷ்தா நாதா (என்ற திருமண பந்த விவகார) துறை ஆகும். அதற்காக மிகவும் பரந்துபட்ட திட்டங்களை வகுப்பதற்கு அவசியம் உள்ளது. ஜமாஅத் அமைப்பும், கிளை அமைப்புகளின் அமைப்பும் ஒருவர் மற்றவருடன் இணைந்து இந்த பணியை செய்ய வேண்டும். இங்கு மீண்டும் ஜமாஅத்துடைய மற்றும் கிளை அமைப்புகளுடைய தர்பிய்யத் துறையையும் மிகவும் செயல் மிக்கதாக ஆக்குவது அவசியம் ஆகும். மீண்டும் (தர்பிய்யத் துறை என்ற) அதே துறையின் பக்கம் விஷயம் திரும்பி விடுகின்றது. நமது இளைஞர்களுக்கு நல்ல தர்பிய்யத் இருக்குமென்றால் பின்னர் திருமண பந்த விவகாரங்களில் செல்வம், குடும்பம் மற்றும் அழகு ஆகியவற்றிற்கு பகரமாக மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸ) அவர்களின் இந்த வழிகாட்டலை எப்போதும் அவர்கள் கருத்தில் கொள்வார்கள். (ஸஹீஹுல் புகாரி, கிதாபுன் நிக்காஹ், ஹதீஸ் எண்: 5090)

இது நமது முன்னுரிமையாக ஆகிவிட்டால் பின்னர் இளைஞர்களும், இளம் பெண்களும் தமது மார்க்க நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும், இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் முன்னுரிமை வழங்குவார்கள். மேலும், இவ்வாறு நாம் நமது அடுத்த சந்ததியினரை பாதுகாக்கவும் முடியும். இல்லையென்றால் இன்றைய நாட்களில் தஜ்ஜால் தீட்டி வரும் திட்டங்கள் இருக்கின்றன. அதிலிருந்து சாதாரண முயற்சிகளால் தப்பிப்பது கடினம் ஆகும். அதற்காக மிகவும் பரந்துபட்ட திட்டம் வகுக்க வேண்டியது இருக்கின்றது. எனவே ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் முதலில் தமது குடும்பத்தை சீர்திருத்துவது அவசியம் ஆகும். பின்னர் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்ற நமது உடன்படிக்கை வெறும் உடன்படிக்கையாகவே இருக்கக் கூடாது ; மாறாக, நம்மில் ஒவ்வொருவரும் அதன் செயல் வடிவமாக ஆக வேண்டும் என்ற இந்த விஷயத்தின் பக்கம் ஜமாஅத்தினருக்கு கவனமூட்டுவதற்கான அவசியம் (பொறுப்பாளர்களுக்கு) உள்ளது. அப்போதுதான் நாம் தஜ்ஜாலை எதிர்க்க முடியும்; நமது சந்ததிகளை பாதுகாக்க முடியும். மேலும் தமது உடன்படிக்கைகளையும் பாதுகாக்க முடியும். அதற்கான உரிமையை நிறைவேற்ற முடியும். மேலும் தமது அமானிதங்களான உரிமைகளையும் செலுத்த முடியும். எனவே உலகின் அனைத்து ஜமாஅத்துகளுடைய தேசிய மற்றும் உள்ளூர் செயற்குழுவும், அதேபோன்று கிளை அமைப்புகளும் இது தொடர்பாக மிகவும் சிந்திப்பதற்கும், ஒரு செயல் திட்டத்தை வகுப்பதற்கும் அவசியம் உள்ளது. அப்போதுதான் உங்களது அமானிதங்களுக்கான உரிமையை நிறைவேற்ற முடியும். நான் சுருக்கமாக உமூரே ஆமாவின் பணிகள் தொடர்பான உதாரணமும் வழங்கியிருந்ததைப் போன்று நமது அமைப்பில் உமூரே ஆமாவும் ஒரு துறை ஆகும். இந்தத் துறையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக கருதப்படுகின்றது. முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றது. ஆனால் பொதுவாக இந்தத் துறையின் பணி என்பது மக்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பது அல்லது கடுமையாக மக்களை எச்சரிக்கை செய்வது ஆகும் என்ற தாக்கம் உருவாகி விட்டது. இதுமட்டுமே அவர்களின் பணி கிடையாது என்பதை உலகின் ஒவ்வோர் இடத்திலும் உமூரே ஆமா துறையில் பணி செய்யக் கூடிய மக்கள் அறிந்திருக்க வேண்டும். இது பணியின் ஒரு பகுதி ஆகும்.

எவ்வாறு இருப்பினும் கடுமையாக எச்சரிக்கை செய்வதும் கூட அவர்களுடைய பணி கிடையாது. தண்டனைக்காக பரிந்துரை செய்வது என்பது எந்தத் தீர்வும் ஏற்படாத நிலையில் ஓர் உச்சபட்ச தேர்வாகும். இங்கு நான் மீண்டும் இதனையே கூறுவேன். அதாவது, தர்பிய்யத் துறை செயல் மிக்கதாக இருந்தால் பின்னர் உமூரே ஆமாவின் ஏராளமான விவகாரங்கள் தீர்க்கப்பட்டு விடுகின்றன. அவை ஜமாஅத் உறுப்பினர்களுக்கிடையிலான பரஸ்பர சண்டைகளுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன அல்லது ஜமாஅத் உறுப்பினர்கள் தவறான செயல்களில் ஈடுபடுவதுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன அல்லது எதிரிகளின் ஏதாவது வழிமுறையினால் அல்லது பலவீனமான ஈமான் கொண்டவர்களின் மூலமாக ஜமாஅத்தில் நிம்மதியின்மையை ஏற்படுத்துகின்ற முயற்சிகளுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. சில இடங்களில் தர்பிய்யத் துறை ஜமாஅத் உறுப்பினர்களுடன் ஒரு சிறப்பான தொடர்பை உருவாக்கி இது தொடர்பாக முயற்சி செய்துள்ளது. அந்நிலையில் எங்கு மக்களின் புகார்கள் நீங்கி விட்டனவோ மேலும் ஜமாஅத்தின் மீதான தப்பெண்ணம் அகன்று விட்டதோ அங்கு அவர்கள் ஜமாஅத்தின் தீர்ப்புகளுக்கு கண்ணியமும் வழங்கியுள்ளார்கள். மேலும், அதனை மரியாதையுடன் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பின்னர் நயவஞ்சகர்கள் மற்றும் தப்பெண்ணம் கொண்ட நபர்களின் மூலமாக பயனடைவதற்கான எதிரிகள் செய்த முயற்சிகளும் கூட தோல்வியடைந்துள்ளன. எனவே தர்பிய்யத் துறை மற்றும் உமூரே ஆமா துறைக்கு சில விவகாரங்களில் இணைந்து பணி செய்வது மிகவும் அவசியம் ஆகும். நான் கூறியது போன்று

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

உமூரே ஆமாவின் பணி என்பது மிகவும் பரந்துபட்டது ஆகும். ஜமாஅத்தில் பொருளாதரா ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கு திட்டம் வகுப்பது அவர்களின் பணியாகும். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தொழில் மற்றும் ஏனைய வேவைாய்ப்பிற்கான வழிகாட்டல் வழங்குவது மற்றும் உதவி செய்வது அவர்களின் பணியாகும். கித்மதே கல்க் (என்ற படைப்பின சேவை) தொடர்பான பணிகளை செய்வது அவர்களின் பணியாகும். அன்பு மற்றும் நேசத்துடன் புரிய வைத்து சச்சரவுகளை முடிவுக்கு கொண்டு வருவது போன்றவையெல்லாம் அவர்களின் பணியாகும். ஆனால் (கஸா எனும் ஜமாஅத்தின் )நீதிமன்ற விவகாரங்களில் தீர்ப்பு வழங்க துவங்கி விடுவதற்கு உமூரே ஆமாவிற்கு எந்நிலையிலும் பங்கு இல்லை. ஆயினும், (கஸா எனும் ஜமாஅத்தின்) நீதிமன்ற தீர்ப்புகளை செயல்படுத்துவது அவர்களின் பணியாகும். ஆனால், அதில் தீர்ப்பிற்குப் பிறகு ஒரு தரப்பு அதனை நடைமுறைபடுத்துவதில் கால தாமதம் செய்து கொண்டிருந்தால் பின்னர் இந்த தீர்ப்பின் படி செயல்பட மறுத்து நீங்கள் ஏன் வீணாக உங்களது மார்க்க (விவகார)த்தை நாசமாக்கிக் கொள்கின்றீர்கள்? என்று மெதுவாக அவர்களுக்கு புரிய வைப்பது உமூரே ஆமா துறையின் பணியாகும். சிறிய அளவிலான உலகியல் பயன்களுக்காக ஏன் உங்களது மார்க்கத்தை அழித்துக் கொள்கின்றீர்கள்? என்று அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். மேலும், அத்தகைய மக்கள் எனது நேரத்தையும் வீணடிக்கின்றனர். அவர்கள் மீண்டும், மீண்டும் எனக்கு கடிதம் எழுதிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் அவர்கள் சுயமே தவறிழைப்பவர்களாக இருக்கின்றனர். ஆக, அவர்களுக்கு புரிய வைத்தால் பெரும்பாலான மக்கள் புரிந்து கொள்கின்றனர். எவ்வாறு இருப்பினும், தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பது மட்டும் உமூரே ஆமா துறையின் பணி கிடையாது. மாறாக, அந்த தண்டனைகளிலிருந்து மக்களை காப்பாற்ற வேண்டும். மேலும், அதற்காக இயன்ற அனைத்து சாத்தியமான முயற்சிகளையும் செய்ய வேண்டும். இதனால் ஜமாஅத்தின் நலனிற்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என்று எங்காவது தவறான பணி நடப்பதாகக் கண்டால் அல்லது கருதினால் பின்னர் உடனடியாக தர்பிய்யத் துறையையும் உடன் இணைத்துக் கொள்ளுங்கள். மேலும், முரப்பிகளின் உதவியையும் பெற்றுக் கொள்ளுங்கள். எங்கு அவர்கள் ஜமாஅத்தின் நலனை பாதுகாப்பார்களோ அங்கு மக்களின் ஈமானை பாதுகாப்பதற்கும் முயற்சி செய்வார்கள். மேலும் இதனை செய்ய வேண்டும்.

சிலமுறை பொறுப்பாளர்களின் செயல்பாடு ஜமாஅத் அமைப்பைக் குறித்து தப்பெண்ணங்களை உருவாக்கி விடுகின்றது. உதாரணமாக, ஒருவர் தமது தேவைக்காக காலத்தின் கலீஃபாவிடம் விண்ணப்பம் கொடுத்துள்ளார் என்றால் பின்னர் ஜமாஅத் தலைவர் அல்லது ஜமாஅத் அமீர் அல்லது உமூரே ஆமா அல்லது ஏதாவது ஒரு குறிப்பான துறையுடன் தொடர்பு இருக்குமென்றால் அவர்கள், அந்தப் பணியை செய்யக் கூடியவர்கள் எங்கள் மூலமாக ஏன் விண்ணப்பம் கொடுக்கவில்லை? என்று அந்த நபருடன் கடுமையாக நடந்து கொள்கின்றனர். மேலும் தலைமையகத்திடமிருந்து ரிப்போர்ட் கொடுக்கும்படி அவர்களிடம் கூறப்பட்டிருந்தால் உடனடியாக ரிப்போர்ட் அனுப்புவதற்கு பகரமாக விவகாரம் தொங்கி விடுகின்றது. பதில் கொடுக்காதபோது பின்னர் அந்த நபருக்கு தப்பெண்ணம் உருவாகி விடுகின்றது. மேலும், எங்களது விண்ணப்பங்கள் தங்களை வந்தடைவதில்லை என்று மக்கள் எனக்கு நேரடியாக எழுதுகின்றனர். எந்த விண்ணப்பங்களில் நீண்ட காலமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்குமோ அந்த மக்களுக்கு குறிப்பாக தப்பெண்ணம் உருவாகி விடுகின்றது. காலத்தின் கலீஃபாவிற்கு நமது விண்ணப்பங்கள் சென்றடைவதில்லை என்று மக்கள் கருதுகின்றனர். அதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. எங்களிடம் ஏன் கேட்கவில்லை என்று ஒரு பக்கம் ; எங்களிடம் கேட்கவில்லை எனவே இதில் நடவடிக்கை எடுக்காதீர்கள் என்று மற்றொரு பக்கம். பின்னர் காலத்தின் கலீஃபாவின் மீதும் காலத்தின் கலீஃபாவின் அலுவலகம் மீதும் தப்பெண்ணங்கள் உருவாகி விடுகின்றன. உண்மையில் இவை அனைத்தும் தவறானதாகும்.

ஒவ்வொரு கடிதமும் இங்கு வந்தடைகின்றது. இங்கு வந்தடைந்துவிடும் கடிதம் படிக்கவும்படுகின்றது; திறக்கவும்படுகின்றது. அது தடுத்து நிறுத்தப்பட்டு விடுகின்றது என்பது (சரியான விஷயம்) இல்லை. எல்லா வகையான விண்ணபங்களும் சம்பந்தப்பட்ட ஜமாஅத்திற்கு அறிக்கைக்காக அனுப்பி வைக்கவும் படுகின்றது.

எனவே எவ்வாறு இருப்பினும், ஜமாஅத் உறுப்பினர்களுக்கு நான் கூறிக் கொள்கின்றேன்; இங்கு உங்களுடைய என்னக் கடிதம் வருகின்றதோ அது (இங்கு) வந்தடைந்து விட்டால் பின்னர் அது திறக்கவும்படுகின்றது; மேலும் அதில் நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட ஜமாஅத்துடைய துறை அதற்குரிய பதில் அனுப்புவதில் காலதாமதம் செய்கின்றது.

எனவே நமது இந்த செயல் ஜமாஅத் உறுப்பினர்கள் மற்றும் காலத்தின் கலீஃபாவிற்கிடையில் தொலைவை உருவாக்கக் கூடியதாக இருக்கின்றது என்று அப்படிப்பட்ட பொறுப்பாளர்கள் அச்சப்பட வேண்டும். ஒவ்வொரு பொறுப்பாளரும் இதனை புரிய வேண்டும். மேலும், குறிப்பாக எவர்களிடத்தில் ஜமாஅத் உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றுகின்ற பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் தங்களது பணியில் சோம்பலைக் காட்டினால் மேலும் மக்களின் உரிமைகளை செலுத்தாவிட்டால் பின்னர் அவர்கள் தங்களது அமானிதங்களில் மட்டும் நம்பிக்கை துரோகம் செய்யவில்லை. மாறாக, அல்லாஹ்வின் பிடியின் கீழும் அவர்கள் வரக்கூடியர்கள் ஆவர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டல் உள்ளது. அறிவிப்பில் வருகின்றது. எந்த இமாம் (என்பதன் பொருள் எல்லா பொறுப்பாளரும் ஆவர்) தேவையுடையவர்கள், ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழைகளுக்காக தமது கதவை அடைத்து வைக்கின்றாரோ அல்லாஹ் அவரது தேவைகளுக்கான விண்ணின் கதவை அடைத்து விடுகின்றான். (சுனன் திர்மிதி, அப்வாபுல் அஹ்காம், ஹதீஸ்:1332)

எனவே இவ்வாறு எண்ணம் கொண்டிருக்கும் ஒரு பொறுப்பாளர் இருக்கின்றார் என்றால் அல்லது அவர்களின் அலுவலகத்தில் பணி புரியக் கூடிய ஓர் ஊழியர் இருக்கின்றார் என்றால் பின்னர் அல்லாஹ்விற்கு அஞ்சியவாறு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் விரைந்து செயல்படட்டும் அல்லது குறைந்தபட்சம் விரைவாக அறிக்கை கொடுத்து விட வேண்டும்.

பின்னர் தலைமையகத்தின் பணி என்னவென்றால் எந்த அளவிற்கு தேவைகளை நிறைவேற்றி கொடுக்க முடியும்? என்று ஆய்வு செய்து பார்க்க வேண்டும். ஆனால், பதிலே கொடுக்காமல் இருப்பது மேலும் விண்ணபத்தை ஒரு மூலையில் வைத்து விடுவது மாபெரும் குற்றமாகும். அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக முடிந்த வரை முயற்சி செய்யுங்கள். ஒவ்வொரு நன்மையான பணியை செய்வதன் பக்கம் கவனம் செலுத்துங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எங்கே இருந்தாலும் அல்லாஹ்வின் மீதான அச்சத்தை மேற்கொள்ளுங்கள். ஒரு தீய பணியை செய்துவிட்டால் பின்னர் அதன் பிறகு நன்மையான பணியை செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். இந்த நன்மை தீமையை அழித்து விடும். மேலும் மக்களுடன் நற்பண்புகளுடனும், அழகிய முறையிலும் நடந்து கொள்ளுங்கள். (சுனன் திர்மிதி, ஹதீஸ் எண்: 1987)

இதேபோன்று ஓர் அறிவிப்பில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ மூஸா (ரலி) மற்றும் முஆஸ் பின் ஜபல் (ரலி) ஆகியோரை யமனுடைய

இரண்டு தனித் தனி பகுதியின் பக்கம் கவர்னராக நியமித்து அனுப்பியபோது எளிமையை உருவாக்குங்கள்; கடினத்தை உருவாக்காதீர்கள் ; அன்பு மற்றும் மகிழ்ச்சியை பரப்புங்கள்; மேலும் வெறுப்பை வளர விடாதீர்கள் என்ற இந்த அறிவுரையை வழங்கினார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, ஹதீஸ் எண்: 4341, 4342)

ஆக மக்களுடன் அதிகம் தொடர்பில் இருக்கும் ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் இந்த அறிவுரை உள்ளது. தங்களுக்கான வழிகாட்டும் விதிமுறையாக இதனை கருத்தில் கொள்ள வேண்டும். எனவே இதுவே அந்த வழிமுறையாகும். அதாவது இதன் மூலம் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தொண்டாற்றுவதற்கான உரிமையை பொறுப்பாளர்கள் செலுத்த முடியும். மேலும் அவர்களின் ஈமானின் பாதுகாப்பிலும் பங்களிப்பை செலுத்த முடியும். மேலும், ஜமாஅத்தின் ஒற்றுமையை நிலைநாட்டுவதிலும் தங்களது பங்களிப்பை செலுத்த முடியும். மேலும், தங்களது அமானிதங்களுக்குரிய உரிமையையும் செலுத்த முடியும். மேலும் இந்த நிலை இருக்கும்போது உண்மையான இஸ்லாமிய சமூகம் என்ற அழகிய சமூகம் உருவாகும். மேலும், அதனை நிறுவுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்திருந்தார்கள். மேலும் நாம் அன்னாரை ஏற்றுக் கொண்டு பைஅத் உடன்படிக்கை செய்திருக்கின்றோம்.

எனவே, பொறுப்பாளர்கள் தங்களது அமானிதங்களுக்குரிய உரிமையை செலுத்துவார்கள் என்பதற்காகவே ஜமாஅத் உறுப்பினர்கள் தங்களை தேர்ந்தெடுத்துள்ளார்கள் அல்லது இனி தேர்ந்தெடுப்பார்கள் என்பதை எப்போதும் பொறுப்பாளர்கள் நினைவிற் கொள்ளுங்கள். ஆனால், அவர்கள் தமது இந்த எண்ணத்துடன் அதாவது தேர்ந்தெடுத்தவர்கள் இந்த எண்ணத்துடன் தேர்ந்தெடுக்கவில்லையென்றாலும் கூட இனி பொறுப்பாளர்களின் பணி என்னவென்றால் அல்லாஹ் அவர்களிடத்தில் என்ன அமானிதங்களை ஒப்படைத்தள்ளானோ அதற்குரிய உரிமையை செலுத்த வேண்டும். மேலும் உங்களது கடமைகளை நல்ல எண்ணத்துடன் நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை உள்ளத்தில் கொண்டவாறு நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக நிறைவேற்றுங்கள். காலத்தின் கலீஃபாவின் வலிமையான உதவியாளராக திகழ்ந்தவாறு நிறைவேற்றுங்கள். முடிந்த வரை மக்களின் ஈமானை வலிமைப்படுத்தவும், அவர்களுக்கு நன்மை பயப்பதற்காகவும் நிறைவேற்றுங்கள். இந்த எண்ணம் கொள்ளும்போது மேலும் இந்த எண்ணத்துடன் தங்களது கடமைகளை நிறைவேற்றும் போது பின்னர் அல்லாஹ் உங்களுடைய பணிகளில் அருளையும் ஏற்படுத்துவான். மேலும், எல்லா சந்தர்ப்பத்திலும் உதவியாளனாகவும் இருப்பான். இந்த நிலை இல்லையென்றால் பின்னர் நாம் இறையச்சத்திலிருந்து விலகிச் செல்லக் கூடியவர்களாக இருப்போம். இறைவனுக்கும் நம்பிக்கை துரோகம் செய்து கொண்டிருப்போம். காலத்தின் கலீஃபாவிற்கும் நம்பிக்கை துரோகம் செய்து கொண்டிருப்போம். சரியாகவோ தவறாகவோ எந்த மக்கள் நம்பிக்கை வைத்தார்களோ அவர்களுடைய ஈமானிற்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: தங்களது அமானிதங்களையும், உடன்படிக்கைகளையும் பேணுகின்றவர்களே நம்பிக்கையாளர்கள் ஆவர். அதாவது, அமானிதங்களை நிறைவேற்றுதல் மற்றும் உடன்படிக்கையை முழுமை செய்தல் ஆகியவை தொடர்பாக இறையச்சத்திலும்,, முன் எச்சரிக்கையிலும் எந்தக் குறைவும் வைப்பதில்லை.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 5, ரூஹானீ கஸாயின், தொகுதி 21, பக்கம் 239 -240)

பின்னர் ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மனிதனின் படைப்பில் இரண்டு வகையான அழகு உள்ளது. ஒன்று விவகாரத்தை அழகிய முறையில் அணுகுதல். மற்றொன்று மனிதன் அல்லாஹ்வின் அனைத்து அமானிதங்கள் மற்றும் உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதில் இந்த விஷயத்தை இயன்ற வரை பேணுவது ஆகும். அதாவது அவற்றில் எந்த ஒரு விஷயமும் இயன்ற வரை விடுபட்டு விடக் கூடாது என்பதை கருத்தில் கொள்வது ஆகும்.

அமானிதங்களின் உரிமையை செலுத்துவதில் எந்த அமலும் வீணாகி விடக் கூடாது......

கூறினார்கள்: அதேபோன்று மனிதன் படைப்பினங்களின் அமானிதங்கள் மற்றும் உடன்படிக்கை தொடர்பாக இதே பேணுதலை கடைபிடிப்பது கண்டிப்பாகும். அதாவது, அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளில் இறையச்சத்துடன் செயல்பட வேண்டும். இது விவகாரத்தை அழகிய முறையில் அணுகுதல் ஆகும் அல்லது அதனை ஆன்மிக அழகு என்று கூறலாம்.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 5, ரூஹானீ கஸாயின், தொகுதி 21, பக்கம் 239 -218)

எனவே நாம் நம்மிடம் ஆன்மிக அழகை உருவாக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு பொறுப்பாளரும் நினைவிற் கொள்ள வேண்டும். எல்லாரையும் விட முதலில் குறிப்பாக பொறுப்பாளர்களாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தக் கூற்று நமக்கு கூறப்பட்டுள்ளது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

தக்வாவின் வழியில் நடப்பதற்கும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்கும் ஒவ்வொரு அஹ்மதியும் உடன்படிக்கை செய்துள்ளார். ஆனால், பொறுப்பாளர்களும் மற்றும் எவர்களிடத்தில் ஜமாஅத் தொண்டுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளனவோ அவர்களும் எல்லாரையும் விட மிக அதிகமாக இந்த விஷயத்திற்கு பொருத்தமானவராகவும், பொறுப்பு மிக்கவராகவும் இருக்கின்றார். அதாவது, நமது உடன்படிக்கைகள் மற்றும் அமானிதங்களை பாதுகாக்க வேண்டும். மேலும் நம்மிடம் என்ன பொறுப்புகள் உள்ளனவோ அவற்றை இறையச்சத்துடன் செயல்பட்டவாறு நமது அனைத்து திறமைகளுடனும் அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக.

தமிழாக்கம்:
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * *



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூமினீன் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் ஜெர்மனி நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் ஆன்லைன் சந்திப்பு மற்றும் ஹுஸூர் அன்வர் அவர்களின் பொன்னான அறிவுரைகள்

**ஐவேளை தொழுகைகளை தொழுவது நமது கடமையாகும் என்றும், நாம் அவற்றை முழுமையான தூய்மையுடனும், கவனத்துடனும் நிறைவேற்ற வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.**

**பெண்கள் பெண்களுக்கு இமாம் ஆக முடியும்
ஆனால் ஆண்களுக்கு இமாம் ஆக முடியாது**

**நம்மவர்களை பாதுகாப்பது நமது முதல் பணி ஆகும். மேலும், ஓர் இறைவன் இருக்கின்றான் என்று நல்ல முறையில் அவர்களிடம் கூறுவது ஆகும். அதற்காக இறைவின் இருப்பிற்காக சான்றுகளாக சம்பவங்களை முன்வைப்பது தமது கதைகளை எடுத்துக் கூறுவது சம்பவங்களை எடுத்துரைப்பது போன்ற இந்த விஷயங்கள் பெரியவர்களின் பணியும் ஆகும். தமது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டது தொடர்பான விஷயங்களை கூறுவதும் அவர்களின் பணியாகும்**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நவம்பர் 14, 2021 அன்று ஜெர்மனி நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் 13 முதல் 15 வயது வரையிலான சிறுமிகளை சந்தித்தார்கள்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் இந்த சந்திப்பிற்காக (டில்ஃபோர்ட்) இஸ்லாமாபாதில் நிறுவப்பட்டுள்ள MTA ஸ்டுடியோவில் அமர்ந்திருந்தார்கள். அதேநேரம் 530-க்கும் மேற்பட்ட நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் சிறுமிகள் Main Market-Mannheim- லிருந்து கலந்து கொண்டார்கள். திருக்குர்ஆன் திலாவத்துடன் சந்திப்பு ஆரம்பமானது. அதன் பிறகு நாஸிராதுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களுக்கு ஹுஸூர் அன்வர் அவர்களிடம் கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்பு கிடைத்தது.

: **கேள்வி**: நிச்சயமாக நாம் திருக்குர்ஆனை அறிவுரை செய்யும் பொருட்டு எளிமையாக்கிவிட்டோம் என்று திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். அவ்வாறிருக்க நமக்கு விளக்கவுரைக்கான தேவை ஏன் ஏற்படுகின்றது? என்பதே எனது கேள்வி ஆகும் என்று ஒரு சிறுமி கேள்வி கேட்டார்.

**பதில்**: ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: (திருக்குர்ஆனை அல்லாஹ்) எளிமையாக்கியுள்ளான் என்பதில் உள்ள விஷயங்கள் என்னவென்றால் அது அமல் செய்வதன் அடிப்படையில் எளிதானதாகும். அல்லாஹ் அறிவுரை செய்துள்ளான். சில விஷயங்கள் வெளிப்படையானவை ஆகும். வெளிப்படையான கட்டளைகளை வழங்கியுள்ளான். அவற்றை மிக மிக எளிமையானவையாக வழங்கியுள்ளான். சரியா? மேலும், இந்த அறிவுரைகள் ஒன்றும் மனிதனுக்கும்; மனிதனின் ஆற்றல்களுக்கும் கடினமானவை கிடையாது என்று அல்லாஹ் அவற்றை குறித்து கூறியுள்ளான். மனிதனுக்கு என்ன ஆற்றல்கள் உள்ளனவோ மேலும், மனிதனின் சிந்தனையின் என்ன நிலை உள்ளதோ அவற்றிற்கு அதனை புரிவது ஒன்றும் கடினமாது கிடையாது. மேலும் அதன் படி அமல் செய்வதும் கடினமானது கிடையாது. எனவே எங்களுக்கு மிக கடினமான விஷயங்களை அல்லாஹ் வழங்கியுள்ளான் என்று கூறுவது தவறாகும். ஆயினும், உங்களுக்கு புரிய வில்லையென்றால், ஏதாவது ஒரு விஷயம் கடினமானதாக தோன்றினால் பின்னர் அதற்கு தஃப்ஸீர் எனும் விளக்கவுரை இருக்கின்றது. திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் அதற்கு எளிமையான விளக்கவுரை வழங்கி அதற்கு இன்ன பொருள் என்று உங்களுக்கு புரிய வைத்துள்ளார்கள். சரிதானா? ஆயினும், அத்துடன் எவர்கள் பரிசுத்தமான மக்களாக இருக்கின்றனரோ அவர்களுக்கே அதன் விஷயங்கள் புரிகின்றன என்பதையும் அல்லாஹ் புரிய வைத்துள்ளான். எவர்கள் அநீதியாளர்களோ அவர்களுக்கு பாதிப்பே ஏற்படுகின்றது; அவர்களுக்கு புரிவதில்லை என்பதையும் அல்லாஹ் கூறிவிட்டான்.

அல்லாஹ் இதில் எப்படிப்பட்ட கட்டளைகளை வழங்கியுள்ளான் என்றால், அதன்படி மனிதன் அமல் செய்ய முடியும். மேலும், தனது பிறப்பின் நோக்கத்தை மனிதன் நிறைவேற்ற முடியும். மனிதப் பிறப்பின் நோக்கம் இறைவணக்கம் செய்வதாகும் என்று அல்லாஹ் கூறியுள்ளான். சரியா? மேலும், அல்லாஹ் கூறியுள்ள அந்த இறைவணக்கங்களும், அல்லாஹ் கூறியுள்ள அந்த இறைவணக்கத்திற்கான வழிமுறைகளும் மனிதனால் செய்ய முடியாத அளவிற்கு கடினமானது கிடையாது. 50 தொழுகைகளை தொழ வேண்டும் என்று கூறுவதிலிருந்து ஆரம்பித்து பின்னர் அவற்றை எளிதாக்கி, எளிதாக்கி ஐவேளை தொழுகைகள் வரை வந்து நின்று விட்டன. ஆக, உங்களுக்கு எளிமையாக்கப்பட்டு விட்டன. ஐவேளை தொழுகைக்கான நேரங்கள் எப்படிப்பட்டவை என்றால் அவை மனித இயல்பின் அடிப்படையில், மனிதனின் குணநலனில் அடிப்படையில், அன்றாட வேலையின் நேரத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன. அவற்றில் துஆ செய்ய வேண்டும் ; மேலும் அல்லாஹ்வை நெருங்க வேண்டும் ; பின்னர் அவனது நெருக்கத்தை பெற வேண்டும் என்ற அவசியம் மனிதனுக்கு இருக்கின்றது. ஆக, எளிமையாக்கப்பட்டதன் பொருள் இதுவே ஆகும். அதன்படி அமல் செய்வது கடினமானதல்ல என்பது அதன் பொருள் ஆகும். மிகவும் கடினமானதாகும் என்று மனிதன் கருதுகின்றான். ஆயினும்,

எவர் நம்பிக்கையாளரோ அவருக்கு அது கடினமாது கிடையாது. எவர் நிராகரிப்பாளரோ அவருக்கு மிகவும் கடினமானதாகும். நம்பிக்கையாளர் அதிலிருந்து பயன் பெறுகின்றார். மேலும் நிராகரிப்பாளருக்கு இழப்பு ஏற்படுகின்றது.

**கேள்வி: துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று ஒரு சிறுமி கேட்டார்.**

**பதில்:** ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: நமது துஆக்களை எப்போது ஒப்புக் கொள்ள வேண்டும்? என்பதை முடிவு செய்வது அல்லாஹ்வின் பணியாகும். அல்லாஹ் நமது அடியை என்ன? ஒருபோதும் கிடையாது. எனவே அவனிடம் வேண்டிக் கொண்டே இருப்பது நமது கடமையாகும். அல்லாஹ்வைத் தவிர நமக்கு வழங்கி விடக் கூடியவர் வேறு எவரும் இல்லை என்ற விஷயத்தையும் மனதில் கொள்ள வேண்டும். அல்லாஹ் தான் எல்லாவற்றிற்கும் ஆற்றல் படைத்தவன் ஆவான். நாம் அவனிடம் துஆ கேட்க வேண்டும்; மேலும் அவன் நமது துஆக்களை ஒப்புக் கொள்வான் என்று அந்த அல்லாஹ் சுயமே கூறுகின்றான். எனினும், அத்துடன் அவன் இதனையும் கூறியுள்ளான்: அதாவது, துஆ செய்யக் கூடியவருக்கு அவன் மீது நம்பிக்கை இருக்க வேண்டும்; மேலும் முழுமையான ஈமான் இருக்க வேண்டும். எனவே அவன் உங்களது துஆக்களை ஒப்புக் கொள்வான் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும். மேலும் அல்லாஹ் என்னவெல்லாம் கூறுகின்றானோ அவை உண்மையாகும் என்ற முழுமையான நம்பிக்கையும் உங்களுக்கு இருக்க வேண்டும். இதன் பொருள் என்ன? அதாவது அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதன் பொருள் என்பது என்ன? அதன் பொருள் என்னவென்றால், அல்லாஹ் நமக்கு என்னவெல்லாம் கட்டளைகள் வழங்கியுள்ளானோ நாம் அவற்றின் படி அமல் செய்ய வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலும் கூறினார்கள்: ஐவேளை தொழுகைகளை தொழுவது நமது கடமையாகும் என்றும், நாம் அவற்றை முழுமையான தூய்மையுடனும், கவனத்துடனும் நிறைவேற்ற வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். தற்போது நீங்கள் உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது. நீங்கள் முழுமையான கவனத்துடன் தொழுது கொண்டு இருக்கின்றீர்களா? நீங்கள் உங்களது தொழுகைகளில் தூய்மையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்களா? என்று ஆய்வு செய்து பாருங்கள். நீங்கள் தீமையான விஷயங்களைக் குறித்து சிந்திக்காதீர்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். நீங்கள் அப்படிப்பட்ட சிந்தனைகளை விட்டு விலகி இருக்கின்றீர்களா? நீங்கள் தீய நட்பு மற்றும் தீய சபையை விட்டு விலகிக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். எனவே இன்டர் நெட்டிலும், டி.வி போன்றவற்றிலும் ஒளிபரப்பாகக் கூடிய தீமையான, வெட்கங் கெட்ட நிகழ்ச்சிகளிலிருந்து நீங்கள் விலகி இருக்கின்றீர்களா? என்று நீங்கள் உங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் நமது சுற்றுப்புறத்தில் வசிக்கக் கூடிய மக்களுடன் மேலும், எவர்களை நமது சகோதர, சகோதரிகளும் நாமும் சந்திக்கின்றோமோ அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும்; மேலும் நாம் எந்த ஒரு தீமையான காரியங்களிலும் ஈடுபடக் கூடாது என்று அல்லாஹ் கட்டளை வழங்கியுள்ளான். எனவே நாம் இதன்படி அமல் செய்து கொண்டிருக்கின்றோமா? அல்லது இல்லையா? என்று ஆய்வு செய்யுங்கள். நமது அனைத்து அமல்களும் நன்மைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும்போதும், அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்து கொண்டிருப்போம் என்றால் பின்னர் அல்லாஹ் கூறுகின்றான்: இவை அனைத்தையும் செய்தால் பின்னர் என்னிடம் துஆ செய்தால் இறை வணக்கம் செய்கின்றீர்கள் என்றால் பின்னர் நான் உங்களுடைய துஆக்களை செவிமடுப்பேன். எல்லாவற்றையும் விட முதலில் நாம் நம்மை சீர்படுத்த வேண்டும். பின்னர் தான் அல்லாஹ்விடம் நமது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட முடியும்.

**கேள்வி: பெண்கள் இமாம் ஆக முடியுமா? என்று ஒரு சிறுமி கேள்வி கேட்டார்.**

**பதில்:** ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

பெண்கள் பெண்களுக்கு இமாம் ஆக முடியும். ஆனால் ஆண்களுக்கு இமாம் ஆக முடியாது. சரிதானே? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதனையே கூறியுள்ளார்கள். நாம் முஸ்லிம்கள் என்றால் உறுதியான முஸ்லிம்கள் என்றால், திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் படி அமல் செய்யக் கூடியவர்கள் என்றால் மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுகளை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் என்றால் பின்னர் அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு என்ன கூறியுள்ளார்களோ அதனையே நாம் செய்ய வேண்டும். ஆண் தான் இமாம் ஆக இருப்பார்; ஒருவேளை பெண்கள் இருக்கின்றனர் என்றால் மேலும் ஏதாவது நிர்பந்தம் இருக்குமென்றால் பின்னர் பெண்கள் இருக்கும் இடத்தில் பெண்களுக்கு பெண் இமாம் ஆக முடியும். சரியா!

ஆக, நமது இடத்திலும் தொழுகைகள் நடைபெறுகின்றபோது, சில நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றபோது பெண்கள் (பெண்களுக்கு) தொழ வைக்க செய்கின்றனர். ரப்வாவில் (நடந்த சம்பவம்) எனக்கு நினைவு இருக்கின்றது: சவுண்ட் சிஸ்டம் (ஒலி அமைப்பு) முழுவதுமாக நன்றாக இல்லாத முந்தைய காலத்தில் ஜல்ஸா நடைபெற்று வந்தபோது லஜ்னாவின் மாநாட்டுத் திடலில் ஜல்ஸா நடைபெற்று வந்தது. அதில் அங்கு லுஹர், அஸர் தொழுகையை பெண்களுக்கு ஜமாஅத்தாக பெண்களே நடத்தி வந்தார்கள். ஆண்களின் பகுதிகளிலிருந்து சப்தல் அங்கு செல்லாமல் இருந்தது. (அதன் காரணமாக பெண்களே பெண்களுக்கு தொழுகைகளை நடத்தி வந்தார்கள்).

**கேள்வி: அத்ஃபாலுல் அஹ்மதிய்யா, குத்தாமுல் அஹ்மதிய்யா, அன்ஸாருல்லாஹ் என்று ஆண்களில் மூன்று அமைப்புகள் உள்ளன. (ஆனால்) பெண்களுக்கு மட்டும் ஏன் இரண்டு அமைப்புகள் இருக்கின்றன? என்று மற்றொரு சிறுமி கேள்வி கேட்டார்.**

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஆண்களின் மூன்று அமைப்புகள் உள்ளன. பெண்களின் இரண்டு அமைப்புகள் உள்ளன. அத்ஃபால், குத்தாம் மற்றும் அன்ஸார் சரியா! மேலும் பெண்களில் பதினைந்து வயது வரையிலான சிறுமிகளுக்கு நாஸிராத் என்ற அமைப்பும் அதன் பிறகு லஜ்னா அமைப்பும் உள்ளது. சரியா! நாங்கள் நாற்பது வயதை விட பெரியவர்களாக ஆகப்போவதே கிடையாது என்று பெண்கள் கூறுகின்றனர். அவ்வாறிருக்க பின்னர் எப்படி அமைப்பை உருவாக்க முடியும்? நாங்கள் என்ன கிழவிகள் ஆகிவிட்டோமா ? என்று அவர்கள் கூறுகின்றனர். கிழவி ஆகிவிட்டீர்கள் என்று நீங்கள் யாராவது ஒரு பெண்ணை கூறினால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்ன? உங்களுடன் சண்டையிடத் தொடங்கி விடுவார்கள். எனவே பெண்களின் உளவியலுக்கு ஏற்ப பெண்களுக்கான அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. பெண்களின் செயல்பாடுகள் ஒரு நேரத்தில் சென்று ஒன்றாகவே அமைந்து விடுகின்றன. சரியா! பொதுவான ரீதியில் வீட்டை நிர்வகிப்பது சரியா! பெண்களும் எப்படிபட்டவர்கள் என்றால் பணி செய்யக் கூடியவர்களாக இருக்கின்றனர். மருத்துவர்களும் உள்ளனர். பொறியாளர்களும் இருக்கின்றனர். மற்ற வேலைகளும் செய்கின்றனர். ஆனால், பொதுவாக, திருமணமாகிவிடும் போது பெண்ணிற்கு குடும்பத்தை நிர்வகிக்கின்ற பணியே மீதமிருக்கின்றது. ஆக, பெண் என்பவர் 25 வயதுடையவராக இருக்கட்டும்; 20 வயதுடையவராக இருக்கட்டும்; அவர் 50 வயதுடைய பெண்ணாக இருக்கட்டும்; அவருக்கு ஏறக்குறைய ஒன்றுபோல பணியே இருக்கின்றது. எனவே அவர்களுடைய செயல்பாடுகளின் அடிப்படையில் அவர்கள் ஒரு குரூப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆண்களின்

செயல்பாடுகள் பல்வேறு வகையானதாக இருக்கின்றன. 40 வயது வரை அவர்களின் செயல்பாடுகள் வேறாக இருக்கின்றன. ஆனால், அதன் பிறகு காதிம்களின் செயல்பாடுகள் வேறுபட்டதாக ஆகிவிடுகின்றன. எனவே பின்னர் சிந்தனையின் வித்தியாசம் உள்ளது. பெண் விரைவாக Mature (பக்குவம் அடைந்தவராக) ஆகிவிடுகின்றார். மேலும் அவரது சிந்தனையும் பெரியவரின் சிந்தனையும் அநேகமாக ஒன்றுபட்டதாக இருக்கின்றன. ஆண்களின் சிந்தனை என்பது முதுமையை அடைந்த பிறகு முற்றிலும் தனித்துவம் வாய்ந்ததாக ஆகிவிடுகின்றது. இதுவும் ஒரு காரணமாக இருக்கக் கூடும். எனவே, பல்வேறு வகையான ஆண்களுக்கு அதிகப் பணி செய்வதன் பக்கம் கவனமூட்டப்பட வேண்டும் என்பதற்காக மூன்று தரங்களில் பிரிக்கப்பட்டுள்ளது ; மேலும், பெண்களுக்கு 25 வயது ஆனாலும் சரி! அல்லது 50 வயது ஆனாலும் சரி! அவர்கள் அப்படியே ஆக்டிவாக பணி செய்வார் என்ற எதிர்பார்ப்பும் பெண்களின் மீது வைக்கப்பட்டுள்ளது. எனவே வேறுபடுத்தவில்லை. ஆக, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கிளை அமைப்புகளை உருவாக்கிய போது இந்த காரணத்திற்காக உருவாக்கினார்கள். அதாவது ஆண்களில் இளைஞர்களின் ஒரு கூட்டத்தை தனியாக வைக்க வேண்டும்; மேலும் அவர்களிடம் அதிகப்படியான பணிகளை பெற வேண்டும். மேலும் ஆண்களிடம் சில பணிகள் இதனால் பெறப்படுகின்றன. ஏனெனில், அது அதிக கடினமானவையாக இருக்கின்றன. அன்ஸார் பருவத்தை அடைந்த மனிதனால் அதனை செய்ய முடியாது. இதன் காரணமாகவும் அநேகமாக ஒரு வித்தியாசம் வைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கான பணிகளைப் பொருத்த வரை ஒன்றுபோலவே இருக்கின்றன: அதனை அவர் 25 வயதுடைய பெண்ணாக இருந்தாலும், 30 வயதுடைய பெண்ணாக இருந்தாலும், 45 வயதுடைய பெண்ணாக இருந்தாலும் 45 வயதுடைய பெண்ணாக இருந்தாலும் அல்லது 50 வயதுடைய பெண்ணாக இருந்தாலும் சரியே! அவர் அதனை செய்ய முடியும். எனவே இவை காரணங்களாக இருக்கக் கூடும். மற்றபடி உங்களின் வயது தெரியப்போவதில்லை என்பது நல்ல விஷயம் ஆகும். இல்லையென்றால் எந்தப் பெண் 40 வயதை அடைந்து விட்டார் என்பது தெரிந்து விடும். அப்போது நீங்கள் கவலைக்குள்ளாகி விடுவீர்கள்.

**கேள்வி: இன்றைய நாட்களில் அஹ்மதி அல்லாத முஸ்லிம் இளைஞர்கள் சமூக வலைதளங்களின் தீய தாக்கங்களின் காரணமாக இறைவன் மற்றும் மார்க்கத்திலிருந்து மிகவும் தொலைவில் சென்று கொண்டு இருக்கின்றனர். நாம் அவர்களுக்கு புரிய வைத்தால் அவர்கள் நமது பேச்சைக் கேட்பதில்லை. ஓர் இறைவன் இருக்கின்றான் என்று அவர்களுக்கு நாம் எவ்வாறு நம்பிக்கையூட்ட வேண்டும்? என்பது எனது கேள்வியாகும் என்று ஒரு சிறுமிக் கேட்டார்.**

பதில்: ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: முதல் விஷயம் என்னவென்றால் முதலில் நம்மவர்களையும் பாதுகாக்க வேண்டும். நமது ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் இருக்கின்றனர் அல்லவா? அவர்கள் இந்த இன்ஃபுளுவன்ஸின் கீழ் வந்து விடக் கூடாது; அவற்றின் தாக்கங்களின் கீழ் வந்து விடக் கூடாது. நம்மவர்களை பாதுகாப்பது நமது முதல் பணி ஆகும். மேலும், ஓர் இறைவன் இருக்கின்றான் என்று நல்ல முறையில் அவர்களிடம் கூறுவது ஆகும். அதற்காக இறைவின் இருப்பிற்காக சான்றுகளாக சம்பவங்களை முன்வைப்பது தமது கதைகளை எடுத்துக் கூறுவது, சம்பவங்களை எடுத்துரைப்பது போன்ற இந்த விஷயங்கள் பெரியவர்களின் பணியும் ஆகும். தமது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டது தொடர்பான விஷயங்களை கூறுவது இதுவும் பணியாகும். ஏதாவது நல்ல கனவுகள் கண்டால் மேலும் அது நிறைவடைந்தால் அதன் மூலம் பாருங்கள்! இறைவன் இப்படிப்பட்டவன் என்றும் கூறவேண்டும். மற்றபடி சமூக வலைதளங்களில் சென்று அல்லாஹ்விற்கு எதிராக விஷயங்களை பேசுகின்றனர்; அல்லது மார்க்கத்திலிருந்து தொலைவில் விலகிச் செல்கின்றனர் என்றால் இது ஷைத்தானின் தந்திரம் ஆகும். நான் அவர்களை வழிகெடுக்க முயற்சி செய்து கொண்டிருப்பேன் என்று ஆதம் பிறந்தபோது ஷைத்தான் கூறியிருந்தான். எல்லாக் காலத்திலும் ஷைத்தான் தனது பல வழிமுறைகளை மேற்கொண்டான். இக்காலத்தில் ஷைத்தான் சமூக வலைதளத்தையும் பயன்படுத்திக் கொண்டு விட்டான். தற்போது சமூக வலைதளங்களை நல்ல பணிகளுக்காகவும் பயன்படுத்த முடியும். தீய பணிகளுக்காகவும் பயன்படுத்த முடியும். சரியா! தற்போது நீங்கள் சமூக வலைதளங்களில் நல்ல விஷயங்களை பதிவிட்டால் பின்னர் மக்களை நன்மையின் பக்கம் கொண்டு வர முடியும். ஆனால், இன்றைய நாட்களில் சமூக வலைதளங்களில் பெரும்பாலும் ஒழுக்கங்களை சீர்கெடுக்கக் கூடிய விஷயங்களே பதியப்படுகின்றன. அவை மார்க்கத்திலிருந்து மக்களை விலக்கிக் கொண்டு செல்கின்றது. இதற்கு பதிலடியாக நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றால் எழுதப்படிக்கத் தெரிந்த மற்றும் ஞானம் படைத்த பெண் பிள்ளைகளாகிய நீங்கள் அதுபோன்ற தவறான விஷயங்களை பார்க்கும்போது சமூக வலைதளங்களில் அல்லாஹ் தொடர்பாக இவ்வாறு வந்துள்ளது; ஆனால் அதற்குரிய பதில் இதுவாகும் என்று கூறுங்கள். மார்க்கத்தைக் குறித்து நீங்கள் இவ்வாறு எழுதியுள்ளீர்கள்; எனவே அதற்குரிய பதில் இதுவாகும் என்று நீங்கள் விளக்க வேண்டும். உங்களுடைய இளம் பெண்களுடைய ஒரு குழுவை அமைத்துக் கொள்ளுங்கள்; அந்தக் குழு சமூக வலைதளத்தில் பதில் அளிக்க வேண்டும். கேள்வி உங்களுக்கு அப்பாற்பட்டது என்றால் பின்னர் லஜ்னாவின் ஒரு குழுவை லஜ்னா அமைத்து அதற்குரிய பதிலை அவர்கள் கொடுக்க வேண்டும். மேலும் குத்தாமுல் அஹ்மதிய்யாவும் மற்றும் அதேபோன்று ஜமாஅத்தின் இதர அமைப்புகளும், மக்களும் அதற்குரிய பதிலை அதே சமூக வலைதளத்தில் கொடுக்க வேண்டும். எந்த சமூக வலைதளத்தில் அதுபோன்ற விஷயங்கள் வருகின்றதோ அதே இடத்தில் கமண்ட்ஸ் செக்ஷன் என்ற ஒன்றும் இருக்கும். சரிதானா! அந்த கமண்ட்ஸில் நீங்களும் உங்களது விஷயத்தை எழுதிவிடுங்கள். மேலும் நீங்கள் தவறான விஷயத்தைக் கூறிக் கொண்டிருக்கின்றீர்கள். இறைவன் இப்படிப்பட்டவன் ஆவான்; மார்க்கம் இதுவாகும் என்று எடுத்துக் கூறுங்கள். மேலும் இதன் காரணமாக சில மக்கள் உடனடியாக தாக்கத்தின் கீழ்வந்து விடக் கூடும். நீங்கள் தவறாக கூறுகின்றீர்கள் என்று அவர்களுக்கு பதில் கிடைத்துவிடும்போது அவர்கள் அதனால் தாக்கமடைகின்றனர். அசல் விஷயம் இதுவாகும். ஆயினும் கூட அவர்கள் சிந்திப்பார்கள். அல்லாஹ் மனிதனுக்கு அறிவை வழங்கியுள்ளான். உங்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்கியுள்ளான். எவர்கள் உங்களை தவறான பாதையில் கொண்டு செல்கின்றனரோ அவர்களின் அந்தக் கேள்விக்கு பதில் இருக்கும்போது அவர்களை சரியான வழியில் கொண்டு வருவதற்காக உங்களிடம் அதற்குரிய தீர்வு இருக்கும். பின்னர் மக்கள் இதனையும் பார்ப்பார்கள். பின்னர் நாம் இதனையும் பார்க்க வேண்டும் என்று மக்கள் முயற்சி செய்வார்கள். மற்றபடி, நான் சீர்கேட்டை உருவாக்குவேன் என்று ஷைத்தானும் கூறியிருந்தான். இன்றைய நாட்களில் ஷைத்தான் சமூக வலைதளங்கள் மூலமாக சீர்கேட்டை உருவாக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றான். அதற்குரிய வழி இதுவே ஆகும். அதாவது, அஹ்மதிகளாக இருக்கக் கூடியவர்களாகிய நாம் அதிகம் அதிகமாக அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டும். அப்போதுதான் நாம் முஸ்லிம்களாக இருப்பதற்குரிய உரிமையை செலுத்த முடியும். மேலும் அந்நியர்களை பாதுகாப்பதற்காக சமூக வலைதளங்களிலேயே அவர்களுக்கு பதில் அளியுங்கள். அப்போதுதான் அவர்களின் தவறான விஷயங்களுக்கு மறுப்பு கிடைக்க முடியும். சரியா!

(நன்றி : அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, நவம்பர் 19, 2021)

* * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 21 september 2023 Issue No. 38

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## முதல் பக்கத் தொடர்ச்சி........(மல்ஃபூஸாத்)

கொண்டும் ஆராய்ந்து கொண்டும் இருக்க வேண்டும். அதேபோன்று பயன் அளிப்பதிலும், நன்மையான திட்டங்களே பயனளிக்கின்றன. எனவே எந்த வழியில் பிறருக்கு நன்மை பயனளிக்க முடியும்? என்ற தேடுதலிலும், கவலையிலும் மனிதன் எல்லா நேரமும் ஈடுபட்டிருக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 478 -காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * *

## முதல் பக்கத் தொடர்ச்சி... (தப்ஸீரே கபீர்)

இறங்குவதை சாத்தியமற்றதாக கூறுவதில்லை. மாறாக, தங்களை தாங்களே மிகவும் உயர்வானவர்களாக கருதுவதன் காரணமாக நபிமார்களை அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. மேலும், அல்லாஹ் எங்களைப் போன்ற பெரிய மனிதர்களின் பக்கம் எங்களை விட குறைவான அந்தஸ்தை கொண்ட ஒரு மனிதருக்கு தூதுச் செய்தியை வழங்கி அனுப்பியுள்ளான் என்று அவர்கள் கூறுகின்றனர். மூன்றாவது கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்கள் மனிதத் தூதரை இந்தக் காரணத்தினால் நிராகரிக்கின்றனர். அதாவது, அவர்களைப் பொருத்தவரை மனிதன் தனது இருப்பில் முழுமையானவனாக இருக்கின்றான். மேலும், முழுமையான மனிதனுக்கு இல்ஹாமின் அவசியம் இல்லை. இன்னும் கூறப்போனால், தங்களது அறிவின் ஆற்றல்களின் காரணமாக அவர்கள் தங்களுக்கான சரியான வழியை தேடிக் கொள்ள முடியும் என்பது அவர்களின் கருத்தாகும்.

நான்காவது ஒரு கூட்டம் மனிதத் தூதர் மீது இந்த அடிப்படையில் ஆட்சேபனை செய்யப்படுகின்றது. அதாவது, அவர்களைப் பொருத்த வரை ஒரு தூதருக்கு மனிதத்துவத்தை தாண்டிய ஆற்றல்களுக்கான அவசியம் இருக்கின்றது. அவர்களுக்கு முன்னால் பலவீனத்திலும் பலவீனமான ஒருவரை இவர் மனிதத்துவத்திற்கு அப்பாற்பட்ட ஆற்றல் பெற்றிருக்கின்றார் என்று கூறி முன் நிறுத்தி விடுங்கள். அப்போது உடனடியாக அவரை ஒப்புக் கொள்வதற்கு தயாராகிவிடுவார்கள். ஆனால், பரிசுத்த ஆற்றல் மற்றும் செயல் ஆற்றல்களுக்கான செயல் முன்மாதிரியைக் காட்டக் கூடிய மனிதர் பொய்யான பெருமிதம் மற்றும் பொய்யான வாதங்களிலிருந்து விலகக் கூடியவர் அவர்களின் பார்வையில் ஒருபோதும் நம்பிக்கைக்குரியவர் கிடையாது. ஏனெனில், அவர்களின் இயல்புகள் விநோதமான விருப்பங்களுக்கு இரையாகி இருக்கின்றது.

அதுபோன்ற மக்கள் சிலமுறை முந்தைய நபிமார்களை கூட ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், புதிய நபியின் வருகையின்போது அவர்களின் இயல்பு இந்தக் குறையை வெளிப்படுத்திவிடுகின்றது. அதாவது, முந்தைய நபியின் மீதான அவர்களின் ஈமானும் கூட வெறும் சடங்கு அடிப்படையிலானதாகவும், மூதாதையர்களின் சொத்தாகவும் இருக்கின்றது.

96-வது வசனத்தின் விளக்கவுரையில் ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

வானவர்கள் என்பதன் பொருள் வானவர்களின் பண்பைக் கொண்ட மனிதர் ஆவார் என்பதே தவிர ஒரு வானவருக்கு பிறகு மற்றொரு வானவர் வருவதற்கு என்ன அவசியம் உள்ளது? என்று இந்த வசனத்திலிருந்து தெரிய வருகின்றது. இந்த வசனத்தில் இதுபோன்ற மக்களின் சிந்தனைகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. அதாவது நாங்கள் உயர்ந்த மக்கள் ஆவோம். மேலும் எங்களுக்கு நேரடியாக இல்ஹாம் இறங்க வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ள மக்களுக்கு இதில் பதில் வழங்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் (நிராகரிப்பாளர்களிடம்) கூறுகின்றான்: வானவர் வானவப் பண்புக் கொண்டவர் மீது இறங்குகின்றாரே தவிர வேறு வகையான படைப்பினத்தின் மீது இறங்கவில்லை. நீங்கள் வானவர்கள் ஆகிவிட்டால் பின்னர் உங்கள் மீதும் வானவர்கள் இறங்குவர். ஆனால், நீங்களோ ஷைத்தான் ஆகிவிட்டீர்கள். அவ்வாறிருக்க உங்கள் மீது வானவர் எப்படி இறங்குவர்.

அடுத்து, மனிதனை விடவும் அதிக வலிமைகள் படைத்த இருப்புக்கு அவசியம் இருந்தது; மனிதனால் இந்தப் பணி முடியாது என்ற புரிதல் கொண்டுள்ள மக்களுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இனக் கூட்டத்திற்கும் அதன் சக இனத்தைச் சேர்ந்த ஒன்றின் மூலமாகவே இரட்சிப்பு வழங்க முடியும். ஏனெனில், அவரே அவர்களைச் சேர்ந்தவராக இருப்பவராலேயே முன்மாதிரியாக ஆக முடியும். எனவே மனிதனைத் தவிர மற்ற இனத்திலிருந்து தூதராக மனிதர்களிடத்தில் வர முடியாது. இந்தப் பொருள்களின் அடிப்படையில் தூதர் என்பதன் பொருள் வஹீ கொண்டு வரக்கூடியவர் என்பது மட்டுமல்ல. மாறாக, நபித்துவத்தின் எந்த அனைத்து நிபந்தனைகளுடன் மனிதத் தூதர் தோன்றுகின்றாரோ அவை பொருளாக எடுத்துக் கொள்ளப்படும். (தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 390 காதியான் பதிப்பு-2010-ம் ஆண்டு)

* * * * *

## 128-வது காதியான் ஜல்ஸா-2023

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் அவர்கள் வருகிற டிசம்பர் 29,30,31 ஆகிய தேதிகளில் 128-வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தயாரிப்புகளை துவங்கிவிடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை வழங்குவானாக. மேலும், இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்காகவும், நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்காகவும் துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்-வ- இர்ஷாத் மர்கஸிய்யா-காதியான்)

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad